Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/984)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 13 ஞாயிற்றுக்கிழமை (30. 10. 2011) பக்கங்கள் 16 ஓசை – 30













# போர்க்குற்றம் குறித்த விசாரணை அவசியம்



## பிரிட்டன் பிரதமர் வலியுறுத்து

(பேர்த்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுதந்திரமான விசாரணைகளை மேற் கொள்ளப்பட வேண்டும் என இலங்கை அர சாங்கத்துக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும் என பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் நடை பெறும் பொதுநலவாய அரசியல் தலைவர்க ளின் உச்சி மாநாட்டின் இரண்டாவது நாளான நேற்றைய அமர்வில் உரையாற்றிய போதே அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

பொதுநலவாய அமைப்பு உலகில் மிகப் பெரியதொரு அமைப்பு. உலகின் மூன்றில் ஒரு பங்கு சனத்தொகையையும், ஆறு கண்டங்க ளின் 54 நாடுகளையும் கொண்ட மிகப்பெரிய இவ்வமைப்புக்கு பலமான பெறுமானம் இருக்க வேண்டும். (15 ஆம் பக்கம் பார்க்க)

## மாறுகிறது பெயர்

(கொழும்பு)

கடலோர பாதுகாப்புத் திணைக் களத்தின் பெயர் மாற்றப்பட்டு பாது காப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச் சின் கீழ் கொண்டு வர தீர்மானிக் கப்பட்டுள்ளது. இதன்படி இதன் பெயர் கரையோர பாதுகாப்பு மற்றும் கடல்வள முகாமைத்துவ திணைக்களம் என மாற்றப்படவுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறி வித்தல் இன்னும் ஓரிரு தினங்களில் வெளியிடப்படவுள்ளது.

இதன் பின்னர் கடலோரப் பிரதேசங் களில் அநாவசியமாகக் கட்டப்பட்டுள்ள அனைத்து நிர்மாணங்களும் அகற்றப்பட வுள்ளன.

அத்துடன் கடற்கரையோரத்திலிருந்து சுமார் நூறு மீற்றர் தூரம் வரைக்குட் பட்ட பகுதிகளில் கட்டடங்கள் நிர்மா ணிக்கவும் புதிய வர்த்தமானி அறிவித் தல் மூலம் தடை செய்யப்படவுள்ளது.

# அச்சுறுத்தலை சமாளிக்கவே புலனாய்வுப் பிரிவு அதிகரிப்பு

## இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

இராணுவம், இராணுவப் புலனாய்வுப் படைப்பிரிவில் உள்ள பற்றாலியன்களின் எண்ணிக்கையை ஆறாக அதிகரித்துள்ளது.

எதிர்காலத்தில் எழக்கூடிய அச்சுறுத் தல்களை சமாளிப்பதற்கும், கடந்தகாலத் தில் ஏற்பட்டது போன்ற சூழல் மீண்டும் உருவாகாமல் தடுப்பதற்குமே இராணு வப் புலனாய்வுப் பிரிவைப் பலப்படுத் தியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரி கேடியர் நிகால் ஹப்பு ஆராய்ச்சி தெரி வித்துள்ளார்.

பலமானதும் உறுதித்தன்மை கொண்ட துமான புலனாய்வு வலையமைப்பை நாம் கொண்டிருந்தால், உள்நாட்டு வெளி நாட்டு அச்சுறுத்தல்களை எதிர்கொள்வ தில் நெருக்கடியை சந்திக்க வேண்டி யதில்லை. எவரிடம் இருந்து அச்சுறுத்தல் வந்தாலும், எமது வலையமைப்பு பல மாக இருந்தால் எம்மை நாம் பாதுகாத் துக் கொள்ளலாம்.

புலம்பெயர் சமூகத்தின் சில சக்திகள், புலிகளின் முன்னாள் போராளிகளிடம் இருந்து அச்சுறுத்தல்கள் வராது என்று இராணுவத்தினால் 100 வீதம் உறுதிப் படுத்த முடியாது.

கடந்தகாலத்தில் எதிர்கொண்டது போன்ற (15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான குற்றம் எவ்வித அடிப்படையும் அற்றது



## இந்தியா தெரிவிப்பு

(பேர்த்)

அடுத்த பொதுநலவாய நாடுகளின் மகாநாட்டை இலங்கையில் நடத்துவதற் கான உரிமையை இலங்கை பெற்றுக் கொள்வதற்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று இந்தியா வின் உப ஜனாதிபதி அஹமத் ஹமீத் அன்சாரி தெரிவித்துள்ளார்.

இலங்கை துரித அபிவிருத்தியைக் கொண்ட நாடாகும். இத்தகைய நாடொன் றுக்கு இவ்வாறான சந்தர்ப்பங்களை வழங்குவது மிக முக்கியமானதாகும் என்றும் அவர் கூறியுள்ளார். பல்வேறு தரப்பினர் எந்த அடிப்படையும் இல்லாத வகையில் இலங்கைக்கு எதிராகக் குற்றம் சுமத்துகின்றனர். அடுத்த பொது நலவாய மகாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு சிலர் எதிர்ப்புத் தெரிவிக் கின்றனர். இது தோல்வியான நடவடிக்கை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# ஆப்கான் போருக்கு இலங்கைப் படையினர் அமெரிக்காவின் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானில் அமெ ரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளின் நடவடிக்கைகளில் இலங்கை படைத்தரப்பினரும் பங்களிப்புச் செய்ய வேண்டும் என 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்கா விடுத்த கோரிக்கையை இலங்கை அர சாங்கம் நிராகரித்ததாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட் டுள்ளது.

அமெரிக்காவின் பிரதி இரா ஜாங்க செயலர் ரொபேர்ட் ஓ பிளேக்கிற்கும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத் தாபய ராஜபக்ஷவுக்கும் இடை யில் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின் போதே இது குறித்து ஆராயப்பட்டதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தகவல் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



ஆப்கானிஸ்தானில் அமெ ரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளின் நடவடிக்கைகளில் இலங்கை படைத்தரப்பினர் பங்கு பற்றுவது படைத்தரப்புகளுக்கு இடையிலான ஈடுபாட்டை முன் னேற்றுவதற்கு குறிப்பிடத்தக்க அளவு உதவும் என இச்சந்திப் பில் ரொபேர்ட் ஓ பிளேக் தெரி வித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த கோத் தாபய ராஜபக்ஷ, இலங்கையில் தேர்தல் நடைபெறும் வேளை யில் ஆப்கானிஸ்தான் படை நட வடிக்கைகளில் படைத்தரப்பினரை (15 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகளை நேற்று நள்ளிரவு முதல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதிகரித்துள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 12 ரூபாவினாலும், டீசலின் விலை லீற்றருக்கு 10 ரூபாவினாலும், மண்ணெண் ணையின் விலை லீற்றருக்கு 8 ரூபாவினாலும் அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

# ஜே.வி.பி தலைவர் சோமவன்சவிற்கு சர்வதேச ரீதியாகவும் சோதனை

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் 14 சர்வதேசக் கிளைகளில் எட்டுக் கிளைகளின் நிர்வாகத்தை இந்தக் கட்சியின் மாற்றுக் குழுவான குமார் அணி தனது கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன், சோம வன்ச அணியினரின் கட்டுப்பாட்டில் நான்கு சர்வதேசக் கிளைகள் மட்டுமே உள்ளன என வும் தகவல்கள் (15 ஆம் பக்கம் பார்க்க)



# சொத்து விபரங்கள் வெளியிடும் சட்டத்தை கடுமையாக்க வேண்டும்

## தேர்தல் ஆணையர் வலியுறுத்து

(கொழும்பு)

சொத்து விபரங்களை வெளியிடும் சட்டத்தை கடுமை யாக்க வேண்டுமென தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப் பிரிய தெரிவித்துள்ளார். தேர்த லில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், சுயாதீன குழுக்களின் வேட்பாளர்கள் சொத்து விபரங் களை வெளியிடுதல் கட்டாயப் படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சொத்து விபரங்கள் பற்றிய தகவல்களை உரிய காலத்தில் வெளியிடத் தவறும் வேட்பாளர் களை (15 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னிந்தியத் திருச்சபையின் 64 ஆம் ஆண்டு விழா நிகழ்வு

(வட்டுக்கோட்டை)

தென்னிந்தியத் திருச்சபை யாழ்ப்பாண ஆதினத்தின் 64ஆம் ஆண்டு விழாவும், சிறுவர் தின நிகழ்வும் கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது. இந்த நிகழ்வில் வட்டுக்கோட்டை (கதீட்ரல்) பேராலயத்தில் நன்றி செலுத்தும் வழிபாடும், திருப்பலிப் பூசையும் தென்னிந்தியப் பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி ட.எஸ். தியாகராசா ஒப்புக்கொடுத்தார்.

அருட்கலாநிதி தியாகராசா அவர்கள் பேருரையினை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் கல்லூரி உப அதிபர் பிரான்சீஸ் சந்திரன் தலைமையில் பிள்ளைகள் விழா (Children Rally) நடைபெற்றது.

சமயப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான பரிசில்களை பேராயர் அதிவண கலாநிதி ட.எஸ்.தியாகராசா, திருமதி தியாகராசா ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

தென்னிந்திய திருச்சபையின் சகல பிராந்தியங்களில் இருந்தும் பெருந்திரளான மக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். (70)

# சிறுவர், முதியோர் தின நிகழ்வு

(வேலணை)

சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகவும், வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். தொடர்ந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்குதல், முதி யோர்களைக் கௌரவித்தல் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (65)

# ஊழியர் சேமலாப நிதிக்கான கைவிரல் அடையாள கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதி மற்றும் கைவிரல் அடையாளம் இடும் செயற்பாடு தொடர்பான கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வடமாகாண உதவித் தொழில் ஆணையாளர், சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் உத்தியோகத்தர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு உதவித் தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதில் அங்கத்தவர்களின் கைவிரல் அடையாளம் மற்றும் புகைப்படம் எடுப்பது தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளதுடன், இவ்வாறான நடவடிக்கை எதிர் காலத்தில் எந்தவிதமான மோசடிகளும் இடம்பெறாத வகையில் சரியான முறையில் ஊழியர் சேமலாப நிதியினைப் பெற்றுக் கொள்ள வழி செய்வதுடன், மிக விரைவாகவும் பெற்றுக் கொள் வதற்கான நடவடிக்கையே இது என அவர் தெரிவித்தார்.(எஸ்)

# யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் இராசதுரை நினைவுதினம் அனுஷ்டிப்பு





(யாழ்ப்பாணம்)

2005ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கணபதி இராசதுரையை நினைவுகூரும் நிகழ்வு, அவரது மரணத்துக்குப் பின்னர் முதல் தடவையாக யாழ் மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கல்லூரி அதிபர் எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அமரர் இராசதுரையின் நண்பர் ஓவியர் இராசையாவின் கைவண்ணத்தில் உருவான அவரது திருவுருவப் படம் வைக்கப்பட்டு அதற்கு தீபாஞ்சலியும், மலரஞ்சலியும் செய்யப் பட்டது.

தொடர்ந்து, வரவேற்புரை, தலைமையுரை, அறிமுக உரைகள் நடைபெற்றன. அமரர் அதிபர் கணபதி இராசதுரை தொடர்பாக உரையாற்றிய கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரிய சமூகத்தைச் சேர்ந்தோர், புல் மன்றிப் போய்க்கிடந்த யாழ் மத்திய கல்லூரி எவ்வாறு இன்று அழகிய பூந்தோட்டங்கள் நிறைந்த உயர்ந்த நிலைக்கு உயர்ந்தது என்பது பற்றி சிலாகித்துப் பேசினர்.

சுமார் 600 மாணவர்களே கல்வி கற்றுக்கொண்டிருந்த யாழ் மத்திய கல்லூரி 2000க்கும் அதிகமான மாணவர்கள் கற்கும் நிலைக்கு உயர்த்தப்பட்டது அதிபர் இராசதுரையின் காலத்திலேயே. அந்தளவுக்கு இந்த கல்லூரியை நேசித்து அதன் வளர்ச்சிக்காக உழைத்த பெருமகன் ஒரு விஜயதசமி நாளில் ஈனத்தனமாகக் கொல்லப்பட்டது வேதனையானது. எனினும், இன்று அவரை நினைவுகூரும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன் என்றார், மத்திய கல்லூரியின் தமிழ் ஆசிரியர் தமிழேந்திரன்.

அமைச்சர் டக்ளஸ் உரை

நேரடியாக இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியாவிட்டாலும், கொழும்பிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொலைபேசி வாயிலாக அதிபர் க.இராசதுரையை நினைவுகூர்ந்து சிற்றுரையாற்றினார்.

மத்திய கல்லூரிச் சமூகத்துக்கும், யாழ் கல்விச் சமூகத்துக்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றிய அமரர் இராசதுரை கோழைத்தனமாகக் கொல்லப்பட்டதை நினைவுகூர்ந்து பேசிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தடைகளைத் தாண்டியும் மத்திய கல்லூரி தொடர்ந்து பல வளர்ச்சிகளைப் பெற்று வருவதாகவும் கூறினார்.

நினைவுப்பேருரை :

அமரர் கணபதி இராசதுரை நினைவுப் பேருரையை, பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபரும், கவிஞரும் ஆங்கில ஆசிரியருமான சோ. பத்மநாதன் "எமது கல்வி முயற்சிகள் : முடிவுறாத பயணங்கள்" என்ற தலைப்பில் நிகழ்த்தினார். நினைவுப் பேருரையில், இலங்கையின் கல்விச் செயற்பாடுகள் நாட்டினதும், மக்களினதும் தேவைகளோடு பொருந்தாமல் இயைபற்றிருக்கும் (Mismatch) நிலை பற்றிய கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

# சமுர்த்தி வர்த்தகக் கண்காட்சி

(வவுனியா)

"சமுர்த்தி உதாயன" என்ற தொனிப்பொருளில் வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஊடாக தேசிய வர்த்தக கண்காட்சியும் சிறுவர் சமூக விழாவும் நேற்று ஆரம்பமாகியதுடன் இன்றும் இடம்பெறவுள்ளது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் ஊடாக இடம்பெறும் இந்நிகழ்ச்சியில் நேற்றைய தினம் வவுனியா மாவட்ட சமுர்த்தி சங்கங்கள் ஊடாகப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடனுதவியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சுயதொழில் முயற்சிகளின் உற்பத்திப் பொருட்களுக்கான கண்காட்சி இடம்பெற்றதுடன், இன்றைய தினம் 10 மாவட்டங்களைச் சேர்ந்த சமுர்த்தி பயனாளிகள் மற்றும் சமுர்த்தி உத்தியோகஸ்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

நேற்றைய நிகழ்வுகளை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ். எம். சார்ள்ஸ் ஆரம்பித்து வைத்தார். இன்றைய நிகழ்வுகளில் அமைச்சர்கள் மற்றும் வட மாகாண ஆளுநரும் கலந்து கொள்ளவுள்ளனர். (125)

# முடிவுக்கு வருகிறது 'லங்கா முடித்த'



(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கான தரை வழிப்பாதை இல்லாத காலங்களில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவரவும், சமயங்களில் பயணிகள் போக்குவரத்துக்கும் கூட கைகொடுத்த லங்கா முடித்த கப்பல் பழைய இரும்புக்கு விற்கப்படவிருப்பதாக துறைமுக அமைச்சு தீர்மானித்துள்ளது.

இக்கப்பல் தயாரிக்கப்பட்டு 29 ஆண்டுகளை கடந்துள்ள "லங்கா முடித்த" கப்பலை நங்கூரமிட்டுப் பாதுகாப்பதற்கு மாதாந்தம் 14 இலட்சம் ரூபா செலவாவதால், அதனை பழைய இரும்புக்கு விற்பதென துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது பயன்படுத்தப்படாமலிருக்கும் இந்தக் கப்பலின் வயது, எரிபொருள் செலவு, அதனை வழிநடத்துவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் ஏனைய நாடுகளின் கப்பல் சார்ந்த நிர்வாக விதிமுறைகளுக்கு பொருந்தாத நிலை போன்ற காரணிகளே கப்பலைச் சேவையில் ஈடுபடுத்த முடியாமைக்கு காரணம் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

1982 இல் கட்டப்பட்ட இக் கப்பல் பல்வேறு தொழில்நுட்பப் பிரச்சினைகளுடன் நங்கூரமிடப் பட்டுள்ளது. இவற்றைச் சீர்செய்து சர்வதேச தரச்சான்றிதழ் பெறுவதாயின் 39 மில்லியன் ரூபா செலவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனைச் சேவையிலிருந்து நீக்கும் முடிவை அமைச்சு எடுத்திருந்தாலும் இதனை அமைச்சரவை அங்கீகாரம் அளிக்க வேண்டியது அவசியமாகும்.

## கல்வி வலயத்திற்கு இணையத்தளம்

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயம் தனது புதிய இணையத்தளத்தினை ஆரம்பித்துள்ளது. வலயத்தால் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள், பாடவிதானங்கள், பரீட்சை வழி காட்டல்கள் இத் தளத்தினூடாக வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த இணையத்தளத்தை www.thenzone.sch.lk எனும் முகவரியில் பார்வையிடலாம் என வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

# மாணவர்களுக்கு உதவி

512 படைப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 10 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை 10.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

10 பாடசாலை மாணவர்களுக்கு 500 ரூபா தொகை வைப்பிலிடப்பட்டதுடன், பரிசில்களும் வழங்கப்பட்டது. மாணவர்களின் எதிகாலக் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்துடன், யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவின் ஏற்பாட்டில் கல்வித் தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், சிவில் அலுவலக பொதுமக்களின் தொடர்பு அதிகாரி லெப்டினட் கேணல் டி.எஸ்.ரணசிங்கே, 51ஆவது படைப்பிரிவின் கொமாண்டர் பிரிகேடியர் ஏ.சி.டி.லட். விக்கிரமரட்ண, யாழ்.உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர். செல்வராஜா உபட்ட யாழ். ஒஸ்மா னியாக் கல்லூரியின் அதிபர் இம்சாம் முபாரக் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எஸ்)

# வாகனத்தில் இருந்து பாய்ந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

காஸ் சிலிண்டர் வெடிக்கப் போகின்றது என நினைத்து அந்த வாகனத்திலிருந்து பாய்ந்த இளைஞர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இரணைமாதா நகர் முழங்காவில் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா ஜெனி (வயது-22) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் கடந்த 8 நாட்களாக சிகிச்சை பெற்று வந்தார்.

குறித்த இளைஞர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுத் தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட போதிலும் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேதபரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# குடாநாட்டில் பரவலாக அதிகளவு மழை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கடந்த 25ஆம் திகதி காலை 8.30 மணி முதல் நேற்றுக் காலை 8.30 மணி வரையுமான நான்கு நாட்களில் யாழ்.குடாநாட்டில் 97.8 மில்லி மீற்றர் மழை பெய்திருப்பதாக திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலைய அதிகாரி புஸ்பநாதன் தெரிவித்துள்ளார்.

இதில் கடந்த 25ஆம் திகதி காலை 8.30 மணி முதல் 26ஆம் திகதி காலை 8.30 மணி வரையான காலப் பகுதியில் மட்டும் 64.1 மில்லி மீற்றர் மழை பெய்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும் தெரிவித்த அவர் இடி மின்னல்களின் போது மக்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டார். (பா)

தவம்செய்ய காட்டுக்குப் போக வேண்டாம். பட்டினிகிடக்க வேண்டாம், தலைகீழாக நிற்கவேண்டாம், வீட்டிலேயே இருந்து கொண்டு மனைவி, மக்களுடன் வாழ்ந்து கொண்டே தவம் செய்வோம்.

- வாரியார்-

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## வெறுப்பை வளர்த்து விடுதலை இல்லை

இவ்வளவு மக்களை அழித்து முடித்து மீதிப்பேரை நிர்க்கதி அவலங்களுக்கும் ஆளாக்கி விட்டிருக்கும் இன்றைய நிலையிலும், கூட்டமைப்பு எம்பிக்கள் பேசுவதைக் கேட்டால் குலைப்பனாகத்தான் இருக்கிறது. பாடசாலைச் சிறார்கள் மத்தியிலும் போய் தங்கள் பேச்சால் வன்முறை உணர்வைத் தூண்டி விடுவதை இப்போதும் செய்து வருகிறார்கள் என்றால், குற்றவுணர்வே கிஞ்சித்துமில்லாத இந்தக் கொழுப்பை என்னவென்று சொல்ல?

"இலங்கையில் தமிழ்க்குரலென்று ஒன்றும் சிங்களக் குரலென்று இன்னொன்றும் உண்டு. எமது இனத்திற்கென்று உள்ள தேசிய அம்சங்களுக்காக எமது ஏராளம் உறவுகள் உயிர் கொடுத்துள்ளார்கள். இன்று ஐ.நா. வரை தமிழர்கள் பற்றிய பேச்சு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்றால் அதற்கு அந்த உயிர்களே காரணம். எமது உறவுகள் சிந்திய இரத்தமே காரணம். எனவே எமது எதிர்கால சிற்பிகளான இவர்களும் தேசிய இன உணர்வாளர்களாக உருவாக்கப்பட வேண்டும்..."

இது ஒரு கூட்டமைப்பு எம்.பி பேசியிருக்கும் பேச்சு. எங்கு பேசியிருக்கிறார் என்றால், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் முன்னால். எப்படி இவ்வளவு குரூரம் நிறைந்தவர்கள் தமிழ் மக்களின் தலைவர்களாக வந்து வாய்த்தார்கள்? பிஞ்சுகள் முன்னால் இப்படிப் பேசி, நம் எதிர்கால சந்ததியையும் என்ன செய்துவிடக் கருதியிருக்கிறார்கள் இவர்கள்? இவர்களிடமிருந்து தப்பி, வன்முறைச் சுழலிலிருந்து எமது சமூகம் வெளியே வருவது எப்படி?

எண்ணினால் மலைப்பாக இருக்கிறது. அதிகார விருப்பங்களுக்காகவும், குறுகிய லாபங்களுக்காகவும் பிஞ்சு மனங்களில் ஊட்டப்படும் இந்த இனவாதமும் வெறுப்பும் விரோதமுமான நஞ்சு அவர்களை மீண்டும் எங்கு கொண்டுபோய் விடும்? நடந்து முடிந்த அவல வரலாற்றையே மீண்டும் நடத்த முற்படுவதைத்தானா நமது அறிவுச் சமூகத்தினரும், தெரிவுசெய்து முன்னால் விட்டுவிட்டு இப்போதும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்?

மக்களைப் பிரித்து பூமிப்பரப்பில் செயற்கையாக வரையப்படும் எல்லைக்கோடுகளால் ஏற்படும் சமூகப் பிளவுகளும், வன்முறையும், மனித அவலமும் பற்றி சர்வதேச ரீதியில், உண்மையான மனித அக்கறை கொண்டிருக்கும் அறிஞர்கள் ஆய்ந்து கவலை வெளியிட்டு வருகிறார்கள். அதன் விளைவுகள் பற்றியெல்லாம் தெளிவாக எடுத்துரைத்து வருகிறார்கள். அதெல்லாம் ஏன் நம்மிடையே இன்னும் பேச்சுக்களாகவில்லை?

தேச, இன, மொழி, சாதி, மதம் போன்றவற்றின் மீதான அபிமானமானது பாசிஸமாக வளர்ந்ததே நம் காலத்திய வரலாறாக இருக்கிறது. சமத்துவம், பல்கலாசாரம் போன்றவற்றை மறுக்கும் ஒடுக்குமுறைத்தன்மை கொண்டதாக அது மாறுகிறது.

தேசத்தை உருவாக்குவதற்கான தேசியவாதத்தை முன்னெடுப்பவர்கள் மற்றவர்கள் மீதான வெறுப்பைக் கட்டியெழுப்புவதனூடாகவே தேசியத்துக்கான ஒருங்கிணைவைச் சாதிக்கின்றனர். ஒருங்கிணைக்கப்பட்ட அந்த மக்களின் குருதியால் எல்லைக் கோட்டினை வரைந்து பிளவாக்கும் கள[illegible]வில், வெறுப்பு மூட்டும் ஆவேசப் பேச்சுக்களால் மக்களைக் கொந்தளிக்க வைத்தபடி இருக்கிறார்கள். அவர்களது அரசியல் லாபத்திற்கு இவ்வாறு தீவிர உணர்ச்சியால் திரளாக்கப்படும் மக்கள் தேவை.

மற்றவற்றை மறுப்பதன் மூலமும் வெறுப்பதன் மூலமுமே இந்த ஒருங்கிணைவு உண்டாக்கப்படுகிறது. இந்தக் கருத்தியலின் பிரதான குணமே சமூக முரண்பாடுகளையும் எதிர் தரப்புகளையும் மறுப்பதாக இருக்கும். அந்த மறுப்பை வன்முறையினால் நிலைநாட்டுவதில் சென்று முடியும்.

நம்முடைய இன, மொழி, தேசிய உணர்வுகளைக் கூர்தீட்டி விடும் பேச்சுக்களிலிருந்தே பிறவற்றின் மீதான மறுப்பும் வன்முறை உணர்வும் வளர்த்துவிடப்படுகிறது. இந்த எல்லைக்கோடுகளை நமக்குள் போட்டு வைத்துக்கொண்டு அதனுள்ளேயே இருப்பதன் மூலம் நாம் பாதுகாப்புடன் இருப்பதாக உணர்கிறோம். ஆனால் உண்மையில் இந்தப் புனித எல்லைக்கோடுகள் யாவும் மனிதகுலத்துக்குத் தீங்கு விளைவிப்பவையாகவே உள்ளன என்றும் நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புரிந்துகொண்டே வருகிறோம். இருந்தாலும் நம்மை மாற்றிக்கொள்ள எண்ணுவதில்லை அல்லது விடுவதில்லை.

சமூகமும் இந்தத் தலைவர்கள் எனப்படுவோரும் நம் மூளையில் திணிக்கின்ற அனைத்து விஷயங்களைப் பற்றியும் நாம் வேறோர் கோணத்திலிருந்து பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. தமிழர்கள் என்ற அடையாளத்தை நாம் எல்லையற்ற நேயத்தின் வழியேதான் அடைய முடியுமே அல்லாமல், இரத்தக்களரியினாலும் வெறுப்பினாலும் அல்ல.

– ஆசிரியர்

# விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் புதியவர்களை இணைப்பது நிறுத்தம்

(கொழும்பு)

ஓய்வூதிய முறைமைக்குள் விவசாயிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதிய நிதியத்தில் நிதிப்பற்றாக்குறை எற்பட்டுள்ளமை காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் பணிப்பாளர் ஆர்.பி. விஜேகோன் குறிப்பிடுகிறார்.

விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்திற்கு இதுவரை ஒன்பது இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரை பங்களிப்பு செய்து வருகின்றனர். இவர்களில் 91 ஆயிரத்து 700 பேர் வரை ஓய்வூதிய நிதியத்தின் மூலம் நன்மையடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய மாதாந்தம் ஆயிரம் ரூபாவில் இருந்து நான்காயிரத்து 100 ரூபா வரையான தொகை பயனாளிகளுக்கு செலுத்தப்படுவதாக விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் பணிப்பாளர் ஆர்.பி.விஜேகோன் மேலும் குறிப்பிடுகிறார்.

## இலவச வைத்திய முகாம்

(யாழ்ப்பாணம்)

நிவாரணம் மற்றும் அபிவிருத்திக்கான செரண்டிப் நிறுவனமும் சாஜா நம்பிக்கை நிதியமும் யாழ்.தகவல் வழிகாட்டல் மத்திய நிலையத்துடன் இணைந்து நடத்தும் இலவச வைத்திய முகாம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறும் இம் முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம், குழந்தைகள், பெரியோர்களுக்கான சிகிச்சைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளது.

இம் முகாமில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (உ-105)

# பெரும்போக நெற்செய்கை கிளிநொச்சியில் அமோகம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கையானது 27606 ஹெக்ரெயர் (கிட்டத்தட்ட 70000ஏக்கர்) பரப்பளவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக மாவட்ட கமநல சேவை நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள எட்டு கமநல சேவை நிலையங்களான கிளிநொச்சி, உருத்திரபுரம், அக்கராயன், இராமநாதபுரம், புளியம் பொக்கனை, முழங்காவில், பூநகரி, பளை, ஆகிய பிரிவுகளின் கீழ் முறையே 6900,3047,1851, 1646,7021,1102,5101,938, ஹெக்ரெயர் பரப்பளவுகளில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக BG 358 BG 360, BG400-6 ஆகிய இன நெல்களும் AT மற்றும் BW நெல் வகைகளும் பெருமளவுக்கு விதைக்கப்படுவதாக கமநல சேவை நிலையத்தினர் தெரிவிக்கின்றனர்.

## பொறியியலாளர் வெற்றிடம் நிரப்புவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

நிர்மாணத்துறை நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் நிலவும் சகல பொறியியலாளர்களுக்குமான வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் முதற்கட்டமாக வடக்கு கிழக்கு உட்பட சகல பிரதேசங்களிலும் செயலாற்றும் வகையில் 150 இற்கு மேற்பட்டோரை நியமிக்கவும் அவர்களுக்கான எழுத்துமூல பரீட்சையை டிசம்பரில் நடத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

# இலங்கையின் நிதிக்கொள்கை மிகவும் ஸ்திரத் தன்மையானது

## மத்திய வங்கி ஆளுநர் பெருமிதம்

(கொழும்பு)

இலங்கையின் நிதிக் கொள்கை ஆளுமை உரிய தன்மையைக் கொண்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். நிதிக்கொள்கை ஆளுமை ஸ்திரத் தன்மையில் தக்க வைத்துக் கொள்வது குறித்து அரசாங்கம் ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி தீர்மானித்ததாகவும் நாட்டின் பணவீக்கம் கடந்த சில காலமாக ஸ்திரத் தன்மையில் உள்ளதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் சுட்டி காட்டியுள்ளார்.

இதற்கு அமையவே பண வீக்கத்தினால் ஏற்படு[illegible] சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியதாக இருந்ததாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரயில் போக்குவரத்து சேவையில் தனியார் துறையின் ஆதிக்கம்

## அரசு மீது தொழிற் சங்கங்கள் கண்டனம்

(கொழும்பு)

ரயில் பெட்டிகளை தனியார் துறையினரிடம் வழங்கும் நடவடிக்கையை தொழிற் சங்கங்கள் பல கண்டித்துள்ளன.

ரயில் போக்குவரத்தில் ஈடுபடுவதற்காக தனியார் துறையினருக்கு ரயில் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. முறையான நடைமுறைகள் எதுவுமின்றி ரயில் பெட்டிகளை தனியார் துறையினருக்கு வழங்குவதன் மூலம் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை ரயில்வே பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் சுமதிபால குறிப்பிட்டார்.ரயில் போக்குவரத்தை தனியார் துறையினரிடம் ஒப்படைப்பதற்கான ஒரு கட்டமாகவே மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். இதுதொடர்பாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ.ஆர். ரத்னாயக்கவிடம் வினவியபோது தனியார் துறையினருக்கு ரயில் பெட்டிகள் வழங்கியமை முறையான நடைமுறைகளுக்கு அமைய உடன்படிக்கை மூலமே வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார். இதன்மூலம் ரயில்வேத் திணைக்களத்திற்கு மேலதிகமாக வருமானம் கிடைப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கில் சுழல் காற்று கடற்தொழில் பாதிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சுழல் காற்றின் காரணமாக மீனவர்கள் பெரும் பாதிப்பை சந்திப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில், வாகரை, ஏறாவூர் மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களில், அதிக எண்ணிக்கையான மீனவர்களின் படகுகள காற்றில் அகப்பட்டு சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காற்றினால் கடலில் இழுத்துச் செல்லப்பட்ட சில படகுகளை மாத்திரம், மீனவர்கள் இதுவரை மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த காற்று மணிக்கு 40 கிலோமீற்றர் என்ற கதியில் அதிகரிக்கக் கூடும் என,காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், கிழக்கு, மத்திய, ஊவா, வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் இடியுடன் கூடிய மழைப் பெய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உயரப்புலம் மெ.மி.த.க பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் யோ.ரவீந்திரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் காணலாம்.

# யுவதிகள் வாழ்வில் முன்னேற முறைசாராக் கல்வி உதவும்

## யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன்

(யாழ்ப்பாணம்)

பாடசாலையை விட்டு விலகிய பின்னர் யுவதிகள் காலத்தை வீணடிக்காமல் முறைசாராக் கல்விப் பிரிவினூடாக இணைந்து தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி சன்மார்க்க மகா வித்தியாலயம், கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், ஆனந்தா பாடசாலை ஆகியவற்றின் மனை முகாமைத்துவ பயிற்சிநெறி மாணவர்கள் இணைந்து நடத்திய மனை முகாமைத்துவக் கண்காட்சி நேற்று முன்தினம் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒவ்வொரு வலயக் கல்வி அலுவலகங்களினூடாக செயற்படுத்தப்பட்டு வரும் முறைசாராக் கல்விப் பிரிவினூடாக பாடசாலையை விட்டு விலகிய யுவதிகளுக்கு எழுத்தறிவையும் வாழ்வதற்கான வழிகாட்டலையும் வழங்கும் முகமாக தையல், கைப்பணி, சமையற்கலை, முக அலங்காரம், மணப்பெண் அலங்காரம் போன்ற பயிற்சிநெறிகளுடன் கணினிப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

6 மாத காலப்பகுதியாக நடைபெறும் இப் பயிற்சிகளில் யுவதிகள் இணைந்து இதனை மேற் கொள்வதன் மூலம் பயிற்சி முடிவில் சான்றிதழ் கள வழங்கப்படுவதுடன், அதன் மூலம் வருமானம கிடைக்கக்கூடியதான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக், யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம், யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த சி.சிவானந்தன், எம்.எம்.ஜெலீஸ், இ.ரவீந்திரன், சன்மார்க்கப் பாடசாலை அதிபர் திருமதி ம.விமலநாதன், கொட்டடி நமசிவாயம் வித்தி யாலய அதிபர் பீ.கணேசராசா, யாழ். ஆனந்தா பாடசாலை அதிபர் எஸ்.ரூபசிங்கம், யாழ்.நாவாந்துறை றோமன் கத்தோலிக்க அதிபர் ஏ.அன்ரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-105)

# குடிநீர்ப் பஞ்சத்தை போக்குவதற்கு பொதுமக்கள் அமைத்த கிணறு



(முழங்காவில்)

பூநகரிப் பகுதியில் உள்ள பெரும்பாலான கிணறுகள் உவர் நீராக மாறியுள்ளமையால் பெரும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

இந்நெருக்கடியைப் போக்கும் முகமாக நன்நீர் ஊறக் கூடிய இடம் தெரிவு செய்யப்பட்டு கிணறு நன்நீர் ஊற்றாக இருப்பதைத் தொடர்ந்து மட்டுவில் நாடு கிழக்கு கமக்கார அமைப்புத் தலைவர் நா.குணசேகரம் ஒழுங்குபடுத்தலில் மக்கள் சிரமதானப் பணியில் வேலைகளைச் செய்து சிலரது நிதிஉதவியுடன் கிணற்றின் வேலைகளை முடித்து மக்கள் பாவனைக்காக விட்டுள்ளனர். இவர்களது கடினமான முயற்சியை பலரும் பாராட்டியுள்ளனர்.

இக் கிணற்றில் இருந்து ஞானிமடம், கறுக்காய்தீவு, மட்டுவில் நாடு, வாடியடி, மரவகுறிச்சி மக்கள் குடிநீரைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

எஞ்சியுள்ள வேலைகளைச் செய்து முடிக்க பூநகரிப் பிரதேச சபையில் உதவி கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (112)

# கடற்தொழிலாளருக்கு புதிய திட்டம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

கடற்தொழிலாளர்கள் பத்தாயிரம் ரூபா வரை ஓய்வூதியம் பெறும் புதிய திட்டமொன்று கடற்தொழில் நீரியல்வள அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் செயற்படத் தொடங்கிய இத்திட்டம் குறித்து இலங்கை வங்கி அதிகாரிகளுக்கும் கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனரத்னவிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் பின்னர் இத்திட்டம் நடைமுறைக்கு வந்ததாக கடற்தொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கான மாதாந்தக் கட்டணத்தை கடற்தொழிலாளி ஒருவர் நேரடியாக இலங்கை வங்கிக் காரியாலயத்தில் செலுத்த முடியும். இது குறித்த மேலதிக விபரங்கள் கடறதொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறான திட்டமொன்று ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. அதன்மூலம் ஒருவர் 1000 ரூபா முதல் 4000 வரையே ஓய்வூதியத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் தற்போதைய புதிய திட்டத்தின்படி ஒருவர் 10000 ரூபா வரை பென்சன் பெற்றுக் கொள்ள முடியும். யாழ். மாவட்டத்தில் இதுவரை 184 கடற்தொழிலாளர்கள் இந்த ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். தற்போது 5591 பேர் விண்ணப்பித்திருக்கின்றனர் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (பா)

# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 37 ஆவது தேசிய மாநாடும் பிரதிநிதிகள் சபைக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க 37 ஆவது தேசிய மாநாடும் பிரதிநிதிகள் சபைக்கூட்டமும் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.கே.குணசேகர, அமைச்சின் மேலதிக செயலாளர் கே.மொகமட்தம்பி, FES இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி திருமதி பெற்றீனா மெஜர் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், கல்வி அமைச்சின் வடமாகாண செயலாளர் எல.இளங்கோவன், கல்வி அமைச் சின் கிழக்கு மாகாண செயலாளர் ஏன்.ஏ.ஏ. புஸ்பகுமார ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.எம்இ.போல், எவ்இ.எஸ்திட்டப்பணிப்பாளர், எஸ்.தண்டாயுதபாணி, என்.இராஜநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்கு ஸ்தாபனக் கோவை XXV பந்து 2-1 இன் பிரகாரம் கடமை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

அத்துடன் ஆசிரியர்களுக்குத் தேவையான அத்தனை விடயங்களும் அடங்கிய கோவையும் வழங்கப்படும் எனவும் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் அறிவித்துள்ளார். (உ)

# முக்கிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறும். இந்த பிரதிநிதிகள் கூட்டத்தில்

வீட்டுத்திட்டங்கள், வாக்குரிமை, மீள்குடியேற்றம், சம்மேளனத்தின் வளர்ச்சி சம்பந்தமாகவும், யாப்பு மற்றும் ஒழுங்கு விதிகள் அடுத்த இரு மாதத்திற்கான தலைவர் தெரிவுகளும் இடம்பெற இருப்பதால் அனைத்து உறுப் பினர்களையும் சமூகமளிக்கு மாறு செயலாளர் ஐ.அஸ்மின் கேட்டுள்ளார். (105)

# அறநெறிப் பாடசாலைகளின் தளபாடக் கொள்வனவுக்கு நிதியுதவி

(வலிகாமம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்த வருடம் முறையாக இயங்கிய அற நெறிப்பாடசாலைகளில் சிலவற்றைகத் தெரிவு செய்து அதன் தளபாடக் கொள்வனவுக்கென நிதி வழங்கியுள்ளதாக வலிகாம வலய உதவிப்பணிப்பாளர் ஹேமலோஜினி குமரன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் பிரதேசத்தில் முறையாக இயங்கிய அறநெறிப் பாடசாலைகளான மருதனார்மடம் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலய அறநெறிப் பாடசாலை, இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, அளவெட்டி காமாட்சி அறநெறிப் பாடசாலை, பெரியவிளான் வடசேரிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, இளவாலை ஒல்லுடை அறநெறிப் பாடசாலை, மல்லாகம் நீலியம்மனை பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, மல்லாகம் பழம்பதி அறநெறிப் பாடசாலை, ஆகிய பாடசாலைகளுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா 30,000 ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், கடந்த ஞாயிற்றுக்கிழமை வடலியடைப்புப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற புணணிய கிராம நிகழ்வின்போது இந்த நிதியுதவிக்கான காசோலைகள் அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

விழாவில் கலந்து காசோலை பெறாத அறநெறிப் பாடசாலைகளுக்கான காசோலைகள், தபாலில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)

# இழந்தவற்றை பெறமுடியாவிட்டாலும் வாழ்வை மேம்படுத்த முடியும்

## - நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின்



(யாழ்ப்பாணம்)

யுத்தம் காரணமாக வளமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்ட போதும் விவசாயிகள் உத்வேகத்துடன் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் உதயன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை வாழ்வெழுச்சி (திவிநெகும) செயற்றிட்டத்தின் மூலம் 10 இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை உருவாக்கும் தேசிய செயற்றிட்ட நிகழ்வுகள் கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

கடந்த காலங்களில் நாம் இழந்தவற்றை மீளப் பெற முடியாவிட்டாலும் எமது அடிப்படை வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டிய கடப்பாடு உள்ளது. அந்த வகையில் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான இச் செயற்றிட்டத்தின் மூலம் வளமான தேசத்தை கட்டியெழுப்ப முடியும்.

யுத்த அனர்த்தங்களினால் வளமான விவசாய நிலங்களிலிருந்து மக்கள் விரட்டியடிக்கப்பட்டு விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்ட போதும், விவசாயிகள் பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபட்டு தன்னிறைவு பொருளாதாரத்தில் நிறைவடைந்தனர். எனவே எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வு சுபீட்சமான வாழ்வாக மாறவேண்டும் அதற்கான நாம் அயராது பாடுபடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்..

வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் உதயன் பழமரம் ஒன்றினை நாட்டி வைத்தார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பற்றிக் நிரஞ்சன் சமுர்த்தி உதவி ஆணையாளர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சமுர்த்தி மற்றும் கிராம அலுவலர்கள் பிரதேச படையதிகாரிகள் கிராமப் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

வாழ்வெழுச்சி (திவிநெகும) தேசிய செயற்றிட்டத்தின் கீழ் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் சௌபாக்கியமான இல்லம் - சுபீட்சமான தாயகம் எனும் கருப்பொருளில் தேசிய ரீதியாக விதை பொருட்களை வழங்கும் நிகழ்வுகளின் இரண்டாம் கட்ட நிகழ்வுகள் அன்றையதினம் யாழ்.குடாநாட்டில் பரவலாக நடைபெற்றுள்ளது

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(30.10.2011–ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஐப்பசி 13 ஆம் நாள்.

இராகுகாலம் 4.33–6.03, சுபநேரம் 9.03 –10.33வரை

நட்சத்திரம்: கேட்டை பி.ப. 5.37 வரை

திதி: சதுர்த்தி மாலை 6.21 வரை

சதுர்த்தி விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணம் வரும் நண்பர் வருகை, குடும்பத்தில் மகிழ்ச்சி, திடீர் பயணம், தேக நலம் சுகம்.

ரிஷபம:– அதிகாரப் போட்டி, பணக் கஷ்டம், நண்பர், தொல்லை, வெளி நாட்டு உதவி, தொழில் முடக்கம்.

மிதுனம் :–பணம் வரும், தொழில்லாபம், வீண் கோபம், எதிரியை வெல்லல் விருத்துபசாரம்.

கடகம்:– குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், அநீதிச்செயல், கடன் படல் வீண் அலைச்சல்.

சிம்மம்:– காசு வரும், நண்பர் வருகை, உல்லாசப்பயணம், வீண் கோபம், அதிகாரப் போட்டி.

கனனி :– குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், வீண் பயம், நினைத்ததைச் சாதித்தல், தெருவிபத்து.

துலாம் :–பணம், வரும், நண்பர் வருகை, அதிகாரப் போட்டி, வீண் கோபம், அதிகாரப்பகிர்வு.

விருச்சிகம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணக் கஷ்டம், மன அமைதி வீண் அலைச்சல், உறவினர் வருகை.

தனுசு:– பணம் வரும், நண்பர் தொல்லை, வீண் பகை, தொழில் முடக்கம், கடன் சுமை.

மகரம:– தொழில் முடக்கம், பணக் கஷ்டம், சொந்த புத்தி இழத்தல், கேட்பார் புத்தி கேட்டல்.

கும்பம் :– பணம் வரும் எதிரியை வெல்லுதல், நண்பர் வருகை, வீண் வதந்தி, உற்சாகம்.

மீனம் :– வெளிநாட்டுச் செய்தி, பணம் வரும், வீண் செலவு, நினைத்ததைச் சாதித்தல்.

## தரம் 9,11 மாணவர்களுக்கான மாகாணமட்ட பொதுப்பரீட்சைகள்

(வலிகாமம்)

மாகாண மட்டத்தில் வருடாவருடம் நடைபெற்று வரும் தரம்9.11வகுப்புக்களிற்கான பொதுப பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி முதல் வலிகாமம் வலய பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

தரம் 11 வகுப்புக்குரிய தமிழ்மொழி, விஞ்ஞானம்,வரலாறு,கணிதம்,ஆங்கிலம்,தொகுதி III பாடங்கள்.சமயம்,தொகுதி I பாடங்கள், தொகுதி II பாடங்கள் முறையே நவம்பர் 14,15,16,17,18, 19,21,22,23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

தரம் 9 இற்குரிய மாகாணமட்டப் பரீட்சைக்குரிய பாடங்களான முதல்மொழி.விஞ்ஞானம்,வரலாறு, கணிதம்,ஆங்கிலம்,புவியியல் ஆகிய பாடங்கள் முறையே.நவம்பர் 21,22,23,24, 25,26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ன.

இப்பரீட்சைக்குரிய வினாத்தாள் பொதிகளைப் பரீட்சை நடைபெறும் தினத்தில், கோட்டக்கல்விப் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தரம் 9,11 மாணவர்களிற்கான பரீட்சைகள் முடிவடைந்ததும் விடைத்தாள் திருத்தப்பட்டு, மாணவர்களுடன் கலந்துரையாடப்படுவதுடன் புள்ளிகள் பகுப்பாய்வு செய்யப்படவேண்டும் எனவும் வலயக்கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (06)

## புலமைப்பரிசில் மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு

(முழங்காவில்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பாராட்டும் நிகழ்வும் இவ்வாண்டில் சிறந்த அதிபர், சிறந்த ஆசிரியர் விருது பெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. குருகுலராஜா பிரதம விருந்தினராகவும் இலங்கை பிரித்தானிய அகிலன் அறக்கட்டளை நிதிய ஸ்தாபகர் மு. கோபாலகிருஸ்ணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டதுடன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயத்தில் பூநகரி, பளை, கண்டாவளை, கரைச்சி ஆகிய கோட்ட பாடசாலைகளிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் சித்தியடைந்த 132 பேர் கௌரவிக்கப்பட்டதுடன் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட ஆசிரிய பிரதீபா பிரபா விருது பெற்ற 4 அதிபர்களும் 12 ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். (உ-112)



முழங்காவில் வைத்தியசாலையின் புதிய கட்டடத்தை நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ திறந்து வைப்பதையும் அருகில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி மற்றும் பிரதிநிதிகள் நிற்பதையும் காணலாம்.


## சந்தைவாய்ப்புக்கள் இல்லாது தேக்கம் அடையும் பொருட்கள்

(தீவகம்)

வேலணைப் பிரதேசத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை இன்றி தேக்கம் அடைந்து காணப்படுவதாக அதன் தலைவர் தெரிவித்துள்ளார். மேற்படி சங்கத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் ஆகியோரின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுத் தற்போது இயங்கி வருகின்றது.

இச் சங்கத்தினால் பனந்தும்பு, தும்புத்தடி ஆகிய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றது.

இருந்தும் இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை தென்னிலங்கைக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. எனவே எமது உள்ளூர் உற்பத்திப் பொருட்களை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி சிறந்த வருமானத்தை ஈட்டுவதற்கு சந்தைப்படுத்தும் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை எனவும் அவர் கவலை தெரிவித்தார். (85)




தெருத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு அடிக்கிற தெண்டு சொல்லுவினம் இதின்ர அர்த்தத்தை நாங்க பலவாறாக எடுத்துக் கொள்ளலாம்.

இப்ப நான் சொல்லப் போறவிடயத்துக்கும் உது நல்லாப் பொருந்தும். என்னண்டா எங்கட மனிசரில சிலருக்கு தத்தமது வேலைகளை அவர்களால பாக்கேலாது.

மற்றவேன்றை வேலேக்கை மூக்கை நுழைப்பினம். அல்லது தங்கடை வேலைகளை மற்றவையைக் கொண்டு செய்து முடிக்கப் பாப்பினம்.

இதுக்கு அகப்படுற ஆள் வசதியாப் போச்செண்டா பிறகென்ன அவேன்ர காட்டிலதான் அண்டைக்கு மழை குடிக்கப் போறேண்டாலும் ஒரு சிண் வேண்டும்.

அவரும் குடிக்க இவர் சிலவளிப்பார் ஒரு சிலர் இருக்கினம் சிண்ணாகக் கூட்டிக் கொண்டுபோறவரே முழுக் கணக்கும் பொறுக்கும் படியாக மாட்டி விட்டுமாறி விடுவினம்.

அத்தகையவர்களிடம் அவேன்ர பணத்தில குடிக்கலாமெண்டு போறவை பாடு ஒருநாளைக்கு முன்பாகச் சொன்ன மாதிரித்தான் முடியுறதும் இருக்கு.

அதுபோக இந்த மாதிரியான சேட்டைகள் பொம்புளையளோட சேட்டை விடுகிறவையிடமும் இருக்கு தாங்கள் அந்தப் பொம்புளையோட நக்கல் அடிக்க இடையில் ஒருதரைப் பயன்படுத்துகிறவையள நீங்களும் பாக்கக் கண்டிருப்பியளல்லே!

உப்புடித்தான் நானொருக்கா ஸ்ரான்லி வீதியால ஆரியகுளம் சந்திக்கிட்ட சைக்கிளில போய்க் கொண்டிருந்தன். எங்கட தோழர் டானியலின்ர மோன் அவற்றை ஞாபகார்த்தமாக இன்ரிரியூட்டொன்றை வைச்சிருக்கிறான்.

அந்த இன்றிரியூட்டடியில ஒருபொம்புளைபிள்ளை சைக்கிள் கொக்குவிலில் சாறியோ அல்லே சுடிதாரின் தாவணியோ மாட்டுப் பட்டதை எடுத்துக் கொண்டு நிண்டுது.

அதையும் கவனிச்சுக்கொண்டு அங்கால போனன். ரெண்டு மூண்டுபேர் நிண்டு அந்தப் பிள்ளையையும் சீண்டி என்னுடனும் ஏதோ இணைப்பொண்டை ஏற்படுத்தும் பாங்கில எதையோ சொன்னதை கவனித்து அதுக்குச் சரியான பதிலடி அவர்களுக்குக் குடுக்கவேணுமெண்டும் தீர்மானித்துக் கொண்டேன்.

அவர்களை நெருங்கியதும் என்னைப் பாத்து அவர்கள் சொன்ன வார்த்தைகள் என்ர காதுகளில் விழுந்துது.

செற்பண்ணி விடுங்க... செற்பண்ணி விடுங்க... அவர்களில் ஒருவர் என்னைப் பாத்துச்சொன்னதும் எனக்கு ஏறிக் கொண்டு வந்தது.

செற்பண்ணி விடவா... என்று கேட்டுக்கொண்டே அவனை விழித்துப் பார்த்தேன் என்னுடைய முகத்தில் இருந்து எதனைக் கண்டானோ?

அவனது முகத்தில் பயப்பீதி சிறிது சிறிதாக ஏறிவருவதைக் கவனித்தன். இப்ப அவசரமாகப் போறன்... இல்லாட்டிச் செற்பண்ணிவிடுவன் இவ்வாறு நான் கூற சைக்கிள் என்னை நகர்த்திச் சென்று விட்டது.

உப்புடித்தான் தெருத் தேங்காய் வழிப்பிள்ளையார் விடையங்களும் நடந்து கொண்டிருக்குப் பாருங்கோ! நம்ம நாடு நல்லாக் கெட்டுப்போச்சு.

# இந்திய - பாகிஸ்தான் வீரர்கள் அடிதடி ஹொக்கிப் போட்டியில் பெரும் பரபரப்பு

(பசல்டன்)

முத்தரப்பு ஹொக்கி லீக் போட்டியில் இந்திய, பாகிஸ்தான் வீரர்கள் மோதிக் கொண்டதால், பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியா, இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் முத்தரப்பு ஹொக்கித் தொடர் அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வருகிறது. பசல்டன் நகரில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது லீக் போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதின.



இந்திய அணிக்கு துஷார் கண்டேகர், முஜ்தபா, ருபிந்தர் சிங் தலா ஒரு கோல் அடிக்க, முதல் பாதியில் 3-0 என முன்னிலை பெற்றது. பின் பாகிஸ்தான் அணிக்கு சோகைல் அபாஸ் (48, 64வது நிமிடம்) இரண்டு கோல் அடித்தார். இதனைத் தொடர்ந்து கப்டன் ஷகீல் ஒரு கோல் அடிக்க போட்டி 3:3 என ஆனது.

இப்போட்டியின் கடைசி கட்டத்தில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்க, ஆக்ரோஷமாகப் போராடினர். அப்போது பெனால்டி கார்னர் ஏரியாவில் வைத்து இந்தியாவின் குர்பஜ் சிங் மற்றும் பாகிஸ்தான் வீரர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இந்திய வீரர்கள் முரட்டுத் தனமாகத் தடுத்ததாக, பாகிஸ்தான் தரப்பில் கூறப்படுகிறது. இதையடுத்து இரு அணி வீரர்களும் கடுமையாக மோதிக் கொண்டனர். ஒரு கட்டத்தில் கைகலப்பில் ஈடுபட, போட்டி முடிய ஒரு நிமிடம் 35 வினாடிகள் மீதம் இருக்கும் போது ஆட்டம் நிறுத்தப்பட்டது. அரை மணி நேரம் வரை போட்டி நடக்கவில்லை. பின் இரு அணி வீரர்களும் மைதானத்துக்குத் திரும்பினர். ஆனாலும், போட்டியைத் தொடர வேண்டாம் என முடிவு செய்தனர்.

இந்த மோதலில் இந்திய வீரர் குர்பாஜ் சிங் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் வீரர்கள் தரப்பில் இம்ரான் சகா, ரசூல் ஆகியோரும் காயம் அடைந்திருப்பதாகத் தெரிகிறது.

## யார் நீங்கள்?

# கங்குலியிடம் கேட்டதால் பரபரப்பு



(சென்னை)

ஈடன் கார்டன் மைதானத்துக்குள் நுழைந்த முன்னாள் இந்திய கப்டன் கங்குலியை பார்த்து ஐ.சி.சி அதிகாரி ஒருவர் 'யார் நீங்கள்?' எனக் கேட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான கடைசி ஒருநாள் போட்டி கொல்கொத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்தது.

இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன் பிட்ச் ரிப்போர்ட் கொடுப்பதற்காக மைதானத்திற்குள் நுழைந்த கங்குலியை ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்பு அதிகாரி தர்மேந்தர் சிங் யாதவ், யார் நீங்கள்? எனக் கேட்டார்.

அப்போது அவர் நான் தான் கங்குலி. பிட்ச் ரிப்போர்ட் கொடுப்பதற்காக மைதானத்திற்குள் செல்கிறேன் எனக் கூறினார். இதற்கு ஒன்றும் மடங்காத தர்மேந்தர் சிங் யாதவ் கங்குலியை மைதானத்திற்குள் செல்ல அனுமதி அளிக்கவில்லை. அடையாள அட்டையை காண்பிக்குமாறு கூறினார்.

அடையாள அட்டையை வர்ணனையாளர் அறையில் வைத்துவிட்டு வந்த கங்குலி மீண்டும் சென்று எடுத்து வந்தார். அதன்பின் கங்குலியை மைதானத்திற்குள் செல்ல அனுமதி அளித்தார். இச்சம்பவம் குறித்து கங்குலி கருத்து ஒன்றும் தெரிவிக்கவில்லை.

இதுகுறித்து மேற்கு வங்க கிரிக்கட் சங்க துணைத் தலைவர் பிஸ்வாரப் தேய கூறுகையில், இந்த சம்பவம் குறித்து விசாரித்து முடிவு எடுக்கப்படும். இது பற்றி கங்குலியுடன் பேச உள்ளேன் என்றார்.

# விளையாட்டுச் செய்திகள்

## கார்லிங் கோப்பை தொடர்

# காலிறுதியில் மான்செஸ்டர், அர்சனல்

கார்லிங் கோப்பை கால்பந்து தொடரின் காலிறுதிக்கு மான்செஸ்டர் யுனைடெட்; அர்சனல் உள்ளிட்ட அணிகள் முன்னேறியுள்ளன.

இங்கிலாந்தில் கார்லிங் கோப்பை கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் நான்காவது சுற்றில் மான்செஸ்டர் யுனைடெட், ஆல்டர்ஷாட் 'டவுன் அணிகள் மோதின.

இதில் அபாரமாக ஆடிய மான்செஸ்டர் யுனைடெட் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு நான்காவது சுற்றுப் போட்டியில் அர்சனல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் போல்டன் வான்டரர்ஸ் அணியை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தது.

மற்ற நான்காவது சுற்றுப் போட்டிகளில், கார்டிப் சிட்டி(எதிர்-பர்ன்லி), கிறிஸ்டல் பேலஸ்(எதிர்-சவுத்தாம்டன்) அணிகள் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றன.


# சச்சின் கப்டனாக வராதது ஏன்? விளக்கமளிக்கிறது பி.சி.சி.ஐ

வயதில் மூத்தவர்களுக்கு சச்சின் மிகுந்த மரியாதை அளிப்பார். அவர்கள் சொல்வதை அமுல்படுத்துவது தனது கடமை என நினைத்தார். இதனால் தான் கப்டனாக பிரகாசிக்க முடியவில்லை என பி.சி.சி.ஐ. முன்னாள் செயலர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின். துடுப்பாட்டத்தில் எண்ணற்ற சாதனைகள் படைத்துள்ளார். ஆனால் கப்டனாக ஏமாற்றம் அளித்தார். கடந்த 1996 இல் அணிக்கு தலைமையேற்ற இவர் 25 டெஸ்டில் 9 தோல்வியை சந்தித்தார். 73 ஒரு நாள் போட்டிகளில் 43இல் தோல்வியை தழுவினார். இதையடுத்து கப்டன் பதவியை 2000இல் இராஜினாமா செய்தார். கப்டனாக இவரது வீழ்ச்சிக்கான காரணம் குறித்து இந்திய கிரிக்கெட் சபையின் முன்னாள் செயலர் ஜெயவந்த் லீலே தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கப்டன் பதவியில் இருந்து சச்சின் விலகிய போது எனது கண்கள் குள்ளமாகின. கப்டனாக இருந்த காலத்தில் அவருடன் பழகும் அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

இவரது பிரச்சினையை யார் சொன்னாலும் கேட்பது தான். அமைதியான குணம கொண்ட இவர், 16 வயதில் சர்வதேச கிரிக்கட்டில் காலடி எடுத்து வைத்தார். அன்று முதல் வயதில் மூத்தவர்களுக்கு மரியாதை கொடுப்பதை வழக்கமாக கொண்டார்.



அவர்கள் சொல்வதை எல்லாம் அமுல்படுத்துவது தனது கடமை என நினைத்தார். அப்படி செய்யும் போது தனது சுயபுத்தியை பயன்படுத்த தவறினார். இது சில நேரங்களில் பாதிப்பை ஏற்படுத்த கப்டன் பதவிக்கு சிக்கலானது என்றார்.

# போர்முலா -1 கார் ஓட்டப் போட்டிகள் முதன்முறை இந்தியாவில் ஆரம்பம்

(நொய்டா)

போர்முலா -1 கார் ஓட்டப் போட்டிகள் இந்தியாவில் முதல் முறையாக இன்று நடைபெறவுள்ளதால் அந்நாட்டு இரசிகர்கள் மகிழ்ச்சியில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதன் முறையாக இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலம் கிரேட்டர் நொய்டாவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 'புத்' சர்வதேச சர்க்கியூட்டில் நடைபெறவுள்ளது.

இத்தனை ஆண்டுகளாக போர்முலா -1 கார் ஓட்டப் போட்டிகளைப் பார்த்து இரசிக்க இந்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் இம்முறை உத்தர பிரதேச மாநிலம் கிரேட்டர் நொய்டாவில் உள்ள புத் சர்வதேச சர்க்கியூட்டில் நடைபெற்வுள்ளமையானது அனைவரது பார்வையும் நொய்டாவை நோக்கித் திரும்பியுள்ளது. நேற்றுமுன்தினமும் இன்றும், பயிற்சிப் போட்டிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

புத் சர்வேதச சர்க்கியூட் தான் போர்முலா - 1 கார் ஓட்டப் போட்டிக்கென இந்தியாவில் கட்டப்பட்ட முதல் சர்க்கியூட் ஆகும். இந்த சர்க்கியூட் 875 ஏக்கர் நிலத்தில் 10 பில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதை ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல எ.்.ப்-1 ட்ரக் பொறியியலாளரான ஹெர்மன் டில்கே வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கின்னஸ் நிர்வாகம் மறுப்பு

நூறு வயதில் மரதன் போட்டியில் பங்கேற்றுச் சாதனை படைத்த பவ்ஜா சிங்கின் சாதனையை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் பிறந்து இங்கிலாந்தில் வசிக்கும் பவ்ஜா சிங் சமீபத்தில் ரொறன்ரோவில் நடைபெற்ற மரதன் போட்டியில் பங்கேற்று நிறைவு செய்தார். இதன் மூலம் உலகிலேயே அதிக வயதில் மரதன் ஓட்டத்தைப் பூர்த்தி செய்ய மனிதர் என்ற சிறப்பை அவர் பெற்றார். இதற்காக அவர் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெறுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் கின்னஸ் சாதனை புத்தகத்தில் அதிக வயதில் மரதன் ஓட்டத்தைப் பூர்த்தி செய்தவர் என்று பவ்ஜா சிங்கின் பெயர் இடம்பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பவ்ஜா சிங்கின் பிறப்புச் சான்றிதழ் அளிக்கப்பட்டால் மட்டுமே இந்தச் சாதனையை அங்கீகரிக்க முடியும் என்று கின்னஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது. 1911 ஏப்ரல் முதலாம் திகதி பவ்ஜா பிறந்ததாகக் கருதப்படுகிறது. அவரது 100 ஆவது பிறந்தநாளுக்கு இங்கிலாந்து மகாராணி எலிசபெத் வாழ்த்து தெரிவித்த கடிதம் கின்னஸ் நிர்வாகத்திடம் சான்றிதழாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# நான்கு இன்னிங்ஸில் ஆட்டமிழக்காத முதல் இந்திய வீரர்

## பாராட்டுக்கள் பல பெறும் டோனி




(சென்னை)


இங்கிலாந்துக்கு எதிரான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தொடரை வைட் வோஷ் அடிப்படையில் 5:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியதையடுத்து, இந்திய அணியின் தலைவர் மஹேந்திர சிங் டோனிக்கு பல்வேறு பாராட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளது.

சிறப்பான முறையில் அணியை வழி நடத்தியதுடன், துடுப்பாட்டத்தில் பிரகாசித்து அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வதில் டோனி முக்கிய பங்கு வகித்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் அணித்தலைவராகவும் நான்காயிரம் ஓட்டங்களை கடந்த வீரர் என்ற சிறப்பும் அவருக்கு கிடைத்துள்ளது.

அத்துடன் ஒரு கிரிக்கெட் தொடரின் நான்கு இன்னிங்ஸ்களிலும் தொடர்ந்து ஆட்டமிழக்காமல ஓட்டங்களைப் பெற்ற முதலாவது இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

# தொடர்ந்தும் முதலிடம்



உலகின் டாப்-8 வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்றுள்ள பெணகள் சர்வதேச ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல் நகரில் நடந்து வருகிறது.

இந்தப் போட்டியில் பங்கேற்ற 2ஆம் நிலை வீராங்கனை ரஷ்யாவின் மரிய ஷரபோவா தொடர்ந்தும் இரண்டு தோல்விகளைச் சந்தித்த நிலையில் காலில் ஏற்பட்ட வீக்கம் காரணமாக தொடரில் இருந்து விலகியுள்ளார்.

அவரது விலகலின் மூலம் பெண்கள் ரென்னிஸ் தரவரிசையில் முதல் இடத்தை ஆண்டின் இறுதிவரை டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி தக்க வைத்துக் கொண்டுள்ளார். ஏனெனில் ஷரபோவா மட்டுமே வோஸ்னியாக்கியிடம் இருந்து முதல் இடத்தைப் பறிக்கும் வாய்ப்பில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது பற்றி மகிழ்ச்சி தெரிவித்த வோஸ்னியாக்கி, ஆண்டின இறுதியில் மீண்டும் ஒரு முறை முதல் இடத்தில் இருப்பதும் வியப்புக்குரியது. ஏனெனில் ஒரு சில வீராங்கனைகள் மட்டுமே வருடத்தின் கடைசியில் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

அதுவும் நான் தொடர்ந்து இரண்டாது ஆண்டாக இந்த இடத்தைத் தக்க வைத்திருப்பது சிறப்பு வாய்ந்தது. எனது ரென்னிஸ் வாழ்க்கையில் இது தான் தொடக்கம். ஏற்கனவே பல சாதனைகளை செய்துவிட்டேன். இதன் மூலம் எனது கனவு நனவாகியுள்ளது என்றார்.

# மே.தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர் புதுவீரர்களுக்கு வாய்ப்பு; ஹர்பஜன் அவுட்



(கொல்கெத்தா)

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடும் இந்திய அணியில் ஹர்பஜனுக்கு இடம் கிடைக்க வில்லை. தமிழக வீரர் அஸ்வின் அணியில் இடம் பிடித்துள்ளார்.

காயத்திலிருந்து மீண்ட சச்சின், சேவாக், யுவராஜ் சிங் ஆகியோர் அணிக்குத் திரும்பியுள்ளனர். சுரேஷ் ரெய்னா நீக்கப்பட்டு அவருக்குப் பதில் விராட் கோலி சேர்க்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடாத இஷாந்த் சர்மா அணிக்குத் திரும்பியுள்ளார். வேகப்பந்து வீச்சாளர் பிரவீண் குமார், சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா ஆகியோருக்கு வாய்ப்பு கிடைக்க வில்லை.

இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் வருண் ஆரோன், உமேஷ் யாதவ், பேட்ஸ்மேன் அஜிங்க்யா ரஹானே, லெக் ஸ்பின்னர் ராகுல் சர்மா என 4 புதுமுகங்கள் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

ராகுல் ராவிட், லட்சுமணன், பிரக்யான் ஓஜா ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

கொல்கத்தாவில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற தேர்வுக்குழு கூட்டத்தில் சிறிகாந்த் தலைமையிலான தேர்வுக்குழுவினர் அணியைத் தேர்வு செய்தனர். முதல் டெஸ்ட் போட்டி நவம்பர் 6 முதல் 10 வரை டில்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் நடைபெறுகிறது.

இதில் மோதும் அணியின் விபரம் வருமாறு: டோனி (கப்டன்), கம்பீர், சேவாக், திராவிட், சச்சின், லட்சுமண், யுவராஜ் சிங், அஸ்வின், ஓஜா, இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், கோலி, ஆரோன், ரஹானே, ராகுல் சர்மா.

## கொலை மிரட்டல்



(லண்டன்)

இந்தியாவுடன் நடந்த ஒருநாள் தொடரில் 5:0 என்ற கணக்கில் படுதோல்வி அடைந்ததால், தனக்கு கொலை மிரட்டல் வந்ததாக இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ஸ்வோன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: இந்திய மண்ணில் நடந்த ஒருநாள் தொடரில் நாங்கள் படுதோல்வி அடைந்தது எங்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. எங்கள் மோசமான ஆட்டத்தால் இங்கிலாந்து இரசிகர்கள் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

டுவிட்டர் இணையத் தளத்தில் பலர் எனக்கு கொலை மிரட்டல் விடுத்து தகவல் பதிவு செய்தனர். அவர்களது கோபம நியாயமானதுதான் என்றாலும், விளையாட்டில் தோல்வி என்பது சகஜமானது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஆட்சேபகரமாக தகவல்களைப் பதிந்த நபர்களின் தொடர்பை துண்டித்துவிட்டேன். இவ்வாறு ஸ்வோன் கூறியுள்ளார்.

## உலகக் கோப்பை கபடிப் போட்டி

# பட்டம் வெல்லும் அணிக்கு காத்திருக்கிறது 2 கோடி

இரண்டாவது உலகக் கோப்பை கபடி போட்டியில் சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு 2 கோடி பரிசுத் தொகை வழங்கப்படும் என்று போட்டிக் குழுவின் தலைவரான சுக்பிர்சிங் பாதல் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் உலகக் கோப்பை பரிசுத் தொகை இரு மடங்காக உயர்ந்துள்ளது. இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: இரண்டாவது இடம்பிடிக்கும் அணிக்கு 1 கோடியும், மூன்றாவது இடம்பிடிக்கும் அணிக்கு 51 இலட்சமும், பங்கேற்கும் அணிகளுக்கு ரூபா 10 இலட்சமும் வழங்கப்படும்.

பாரம்பரிய விளையாட்டான கபடி கடந்த ஓர் ஆண்டாகவே பிரபலமடைந்து வருகிறது. மேலும் 18 நாடுகள் இந்தப் போட்டியில் பங்கேற்பது தொடர்பாக எங்களை அணுகியுள்ளன. உலகக் கோப்பை தொடக்க விழாவில் பாலிவுட் நடிகர் ஷாருக்கான் பங்கேற்கிறார்.

வரும் நவம்பர் 1 முதல் 20ஆம் திகதி வரை பஞ்சாப் தலைநகர் சண்டீகரில் நடைபெறவுள்ள இந்த உலகக் கோப்பை போட்டியில் இந்தியா, ஆர்ஜென்டீனா, பாகிஸ்தான், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, இத்தாலி, நோர்வே, ஆப்கானிஸ்தான், இலங்கை, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய 13 அணிகள் பங்கேற்கின்றன. இது தவிர மகளிர் அணிகளும் பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# முல்லேரியா கொலைச்சம்பவம் சுயாதீன ஆணைக்குழு வேண்டும்

## ஐ.தே.க அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

முல்லேரியா கொலைச்சம்பவத்தின் சூத்திரதாரிகளை சரியாக இனங்கண்டு கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வருகிறது. கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தொழிற்சங்க ஆலோசகருமான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் படுகொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் சுயாதீன ஆணைக் குழுவொன்றை அமைக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியும் கேட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கட்சியின் செயலாளர் நாயகமான நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க,பாரதலக்ஷ்மனின் கொலை தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் எந்த முன்னேற்றமும் இல்லை. எனவே இந்த விடயம் குறித்து சுயாதீன ஆணைக்குழு ஒன்றின் மூலம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். என அவர் கூறினார்.

# கொரிய மொழிப்பரீட்சை வெட்டுப்புள்ளி அறிவிப்பு

(கொழும்பு)

வரலாற்றில் முதல் முறையாக கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் 200புள்ளிகளை 150 மாணவர்கள் பெற்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கின்றது. இம்முறை பரீட்சைக்கு 44214 மாணவர்கள் தோற்றியதாகவும், அதில் 10003 பேர் சித்தியடைந் துள்ளதாகவும், சித்தியடைவதற்கான வெட்டுப்புள்ளியாக 124 எனவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். 2012ஆம் ஆண்டிற்கு கொரிய தொழில் வாய்ப்பிற்காக அதிலிருந்து 9300 பேர் தெரிவு செய்யப்பட உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை நேர்முகப் பரீட்சை மற்றும் உடற்தகுதிப் பரிசோதனை என்பவற்றிற்கு உட்படுத்தி தகைமை பெறுவோரின் விபரங்களை கொரிய மனிதவளத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் உட்படுத்த உள்ளதாகவும்,அதிலிருந்து தெரிவு செய்யப்படுவோருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணி யகத்தினால் 10 நாள் பயிற்சியொன்றினைப் பெற்றுக்கொடுத்து தொழில் வாய்ப்பிற்காக கொரியா அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரி வலியுறுத்தினார்.

# சிறுவர் துஷ்பிரயோகம் பெண் உட்பட இருவர் கைது

(கொழும்பு)

பதினான்கு வயதான சிறுமி ஒருத்தியை விபசார நடவடிக்கையில் ஈடுபடுத்திய பெண்ணொருவர் உட்பட இருவர் அத்தனகல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சிறுமி அகுங்கல, பலப்பிட்டி பிரதேசங்களிலுள்ள ஹோட்டல்களில் விபசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் என முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது. சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இருவரும் பலப்பிட்டிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அகுங்கல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


# கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் தோல்வி கோத்தாபய மீது குவியும் குற்றச்சாட்டுகள்

(கொழும்பு )

**கொழும்பு மாநகர சபையை ஆளும்கட்சி கோட்டை விட்டது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் மீது குற்றச்சாட்டுக்கள் குவிகின்றன.**

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தோல்வியடையக் காரணம் பாதுகாப்புச் செயலாளர் கோததாபய ராஜபக்ஷவே என அதே கட்சியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினரான மஹிந்த கந்தகம குற்றஞ்சாட்டியுள்ளார். கொழும்பின் சேரிப்புற வீடுகளை அவர் அகற்றுவதற்கு மேற்கொண்ட தீர்மானத்தின் மூலமே இந்தத் தோல்வி ஆரம்பித்தது. மேலும், இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியும் பலம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் அனைவரும் கட்சியின் தலைமையின் கீழ் ஒன்றிணைந்து கொழும்பு மாநகர சபையின் வெற்றிக்காகப் பாடுபட்டு அந்த இலக்கை அடைந்து கொண்டனர்.

அத்துடன் ஆளுந்தரப்பில் மிலிந்த மொரகொட, ஆஸாத் சாலி, முகம்மத் மஹ்ரூப் ஆகியோரை கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் தனது கட்சி நிறுத்தியதும் படுதோல்விக்குக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.



# மேலும் எழுநூறுபேரை சமூக மயப்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

புனர்வாழ்வு பெற்றுவரும் புலி உறுப்பினர்களில் மேலும் 700பேர் விரைவில் சமூக மயப்படுத்தப்பட உள்ளனர்.

புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களில் மேலும் 700 பேர் இருப்பதாக புனர்வாழ்வு ஆணையாளர் திணைக்களம் தெரிவித்தது.

வவுனியா,வெலிகந்த புனர்வாழ்வு நிலையங்களில் அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சந்தன் ராஜகுரு குறிப்பிட்டார்.

இன்னும் சில தினங்களில் அவர்களையும் சமூகமயப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

புனர்வாழ்வு நிலையங்களில் நீதிமன்ற உத்தரவின் பேரில் சுமார் 100 முன்னாள் பெண் உறுப்பினர்களும் இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# புலிகளின் சர்வதேச வலையமைப்பு கடும் சீற்றத்தில் இலங்கை அரசு

## தயாராகிறது கறுப்புப் பட்டியல்

(கொழும்பு)

புலிகளின் சர்வதேச வலை அமைப்பில் இணைந்து அரசுக்கு எதிராகச் செயற்படும் அனைவருக்கும் எதிராகவும் கடும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது. இதன் முதற்கட்டமாக விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பைச் சேர்ந்த சகல தரப்பினரையும் கறுப்புப் பட்டியலில் இணைதது்க் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி, புலிகளின் சர்வதேச வலையமைப்பில் அங்கம் வகிக்கும் எந்தவொரு நபரும் இனிவரும் காலங்களில் நாட்டுக்குள் பிரவேசிக்க முடியாது என திவயின என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புனைப் பெயர்களினால் அழைக்கப்படும் குறித்த புலி உறுப்பினர்களின் உண்மையான பெயர்களை புலனாய்வுப் பிரிவினர் கண்டு பிடித்துள்ளனர். விடுதலைப் புலிச் செயற்பாட்டாளர்கள் தங்களது பிள்ளைகள், மனைவி மற்றும் நெருங்கிய உறவினர்களை சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் இலங்கைக்கு அனுப்பி வைத்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறானவர்கள் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளையும் அழைத்து வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. வடக்கில் பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# உள்ளூராட்சிமன்ற கண்காட்சி வவுனியாவில் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழைக்கு மத்தியிலும் வடமாகாணத்தின் 34 உள்ளூராட்சி மன்றங்களின் கண்காட்சிகளை உள்ளடக்கிய சிம்போசியம் உள்ளூராட்சி மன்றங்களின் கண்காட்சி இன்று முதல் முதலாம் திகதி வரை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை காலை 9.00 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமாகும் நிகழ்வுகளின் பின்னர் நகரசபை மைதானத்தில் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்படுவதுடன் மைதானத்திலும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

எனினும் நகரசபை மைதானம் பெரும் வெள்ளக்காடாக காணப்படுவதுடன் ஏற்பாட்டுப்பணிகளும் மந்த கதியில் இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை வவுனியா பொதுப் பூங்காவில் சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரும் நிலையில் மக்களின் வருகை குறித்து பல்வேறு சந்தேகங்களை அதிகாரிகள் எழுப்பியுள்ளனர். (125)

# மொழி உரிமை கருத்தரங்கு

(வவுனியா)

சிறுபான்மை மக்களின் மொழிசார்ந்த உரிமையை உறுதிப்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் அதனை வலிமைப்படுத்தும் நோக்குடன் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் பணியாற்றும் பிரதேச ஊடகவியலாளர்களுக்கான தெளிவுபடுத்தும் கருத்தரங்கு நேற்றுக் காலை 9 மணி முதல் 2 மணிவரை வவுனியா நெல்லி ஸ்டார் ஹோட்டலில் இடம்பெற்றது

கிராம அபிவிருத்தி அமைப்பினால் ஒழுங்கமைக்கப்பட்ட இக்கருத்தரங்கில் சட்டத்தரணி எஸ்.ஜே.புஞ்சி கேரத், ஊடகவியலாளர் சீ.தொடவத்த மற்றும் சட்டத்தரணி ஜெகத் சேனாராட்சி ஆகியோர் கலந்துகொண்டு இவ்விடயம் சார்ந்த சட்ட வரைவு மற்றும் ஊடகங்களின் ஊடாக மொழிசார்ந்த உரிமையை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பது தொடர்பான கருத்துக்களை முன்வைத்தனர். (125)

# ஐம்பதாயிரம் கிலோ போதைப்பொருள் இந்த ஆண்டில் மட்டும் சிக்கியது

(கொழும்பு)


இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மற்றும் சோதனை நடவடிக்கைகளின் மூலம் 50 ஆயிரத்து 70 கிலோகிராமிற்கும் அதிகமான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு, சுங்க திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம், கடற்படை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் இந்த போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வருடத்தின் முதல் பத்து மாத காலப்பகுதியில் 23 கிலோகிராமிற்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருள், 18 கிலோகிராம் ஹஜீஷ் போதைப்பொருள் மற்றும் 10 கிலோவிற்கும் அதிகமான கொக்கேயின் போதைப்பொருள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுவரையில் ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பில் மூவாயிரத்து 800இற்கும் அதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

# யு.எஸ்.பி. மூலம் கம்ப்யூட்டர் பாதுகாப்பு




உங்கள் யு.எஸ்.பி. ப்ளாஷ் ட்ரைவினைக் கம்ப்யூட்டருக்கான சாவியாகப் பயன்படுத்தலாம். இதற்கான வசதியை பிரிடேட்டர் (Predator) என்ற புரோகிராம் தருகிறது. இதனை http://www.montpellierinformatique.com/predator/en/index.php என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து இலவசமாக தரவிறக்கம் செய்து, கம்ப்யூட்டரில் இன்ஸ்டோல் செய்து பயன்படுத்தலாம். கூடுதல் வசதிகள் தேவைப்படுவோர், கட்டணம் செலுத்தி பிரிமியம் புரோகிராம் பெறலாம்.

நீங்கள் கம்ப்யூட்டரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கையில், வெளியே சென்றாலும், பிரிடேட்டர், உங்கள் கம்ப்யூட்டரைப் பாதுகாக்கிறது.

இந்தப் புரோகிராமை இன்ஸ்டோல் செய்கையில் தரப்படும் வழிமுறைகளைப் பின்பற்றி, யு.எஸ்.பி. ப்ளாஷ் ட்ரைவினைத் தயார் செய்திடவும்.

யு.எஸ்.பி. ப்ளாஷ் ட்ரைவினை இணைத்து, பிரிடேட்டர் புரோகிராமினை இயக்கியபின், தொடர்ந்து நீங்கள் கம்ப்யூட்டரில் பணியை மேற்கொள்ளலாம். சற்று வெளியே செல்ல வேண்டும் என்றால், கம்ப்யூட்டரிலிருந்து ப்ளாஷ் ட்ரைவினை எடுத்துச் செல்லவும். அதனை எடுத்தவுடன், உங்கள் மொனிற்றர் திரை இருட்டாக, கறுப்பாக மாறிவிடும். கீ போர்ட் மற்றும் மவுஸ் தங்கள் செயற்திறனை இழக்கின்றன.

நீங்கள் திரும்பி வந்தவுடன் மீண்டும் ப்ளாஷ் ட்ரைவினை இணைத்து, பணியைத் தொடரலாம். மொனிற்றர் முன்பு இருந்த திரையைக் காட்டும். மவுஸ் மற்றும் கீ போர்ட் உயிர்பெற்று இயங்கும். இது விண்டோஸ் இயக்கத்தை நிறுத்தி, மீண்டும் கம்ப்யூட்டரை உயிர்ப்பித்து, பாஸ்வேர்டைத் தந்து இயக்குவதைக் காட்டிலும் எளிதானது. இந்த புரோகிராமினைக் கட்டணம் செலுத்திப் பெற்றால், கீழ்க்காணும் கூடுதல் வசதிகளைப் பெறலாம்.

அனுமதி பெறாதவர் கம்ப்யூட்டரை இயக்க முற்படுகையில், பிரிடேட்டர் எஸ்.எம்.எஸ். அல்லது இமெயில் மூலம் நம்மை எச்சரிக்கும்.

# ஆங்கிலப் புலமைக்கு விளையாட்டு

ஒரு மொழியில் நாம் கொண்டிருக்கின்ற புலமை, அம்மொழியின் சொற்களை நாம் எப்படி அறிந்து வைத்துள்ளோம் என்பதில தான் உள்ளது. அந்த வகையில் ஆங்கில மொழி பயன்படுத்துவதில் நாம் கொண்டுள்ள திறமையினை சோதனை செய்து கொள்ள இணையதளம் ஒன்று இயங்குகிறது. இதன் பெயர் Knoword. சொல் சோதனை மட்டுமின்றி, அதனைச் சரியான எழுத்துக்களில் அமைக்கிறோமா என்பதனையும் இது நம்மிடம் எதிர்பார்க்கிறது. இந்த விளையாட்டு தரப்படும் இணைய தள முகவரி http://www.knoword.org/home.php.

இந்த தளத்தில் நுழைந்தவுடன், இதில் நம் பெயர், மின்னஞ்சல் முகவரி போன்ற தகவல்களுடன், இதற்கென யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்டினை அமைக்க வேண்டும். பின்னர், இதில் லொக் இன் செய்து விளையாடலாம். சொல் ஒன்றுக்கான விளக்கம் அளிக்கப்பட்டு, முதல் எழுத்து மட்டும் தரப்படும். நீண்ட கட்டத்தில் அந்த சொல்லை சரியாக டைப் செய்துவிட்டால், அடுத்த சொல் தரப்படும். சொல் தெரியாவிட்டால், அதனை ஸ்கிப் செய்திடலாம். அடுத்த சொல்லுக்கான எழுத்தும் விளக்கமும் தரப்படும்.

சொற்களைச் சரியாக டைப் செய்து கொண்டே சென்றால், அடுத்தடுத்து சொற்கள் கிடைக்கும். ஒரு நிமிடத்தில் நீங்கள் எத்தனை சொற்களை கண்டறிகிறீர்கள் என்பதே இந்த விளையாட்டு.




உங்களின் சொல் சரியாக அறியும் திறன், வேகம் ஆகியவை கணக்கிடப்படுகின்றன. நீங்கள் எத்தனை சொற்கள் சரியாக அமைததீர்கள் என்ற முடிவு காட்டப்படும்.

இதுவரை இந்த தளத்தில் விளையாடப்பட்ட எண்ணிக்கை பத்து லட்சத்தினைத் தாண்டி விட்டது. அவசியம் அனைவரும் அடிக்கடி பார்க்க வேண்டிய ஓர் இணையத்தளம்.

உங்களிடம் ஐபோன் இருந்து, அதில் இந்த சொல் விளையாட்டினை விளையாடிப் பார்க்க ஆசைப்பட்டால், அதற்கான அப்ளிகேஷனை அப்பிள் ஸ்டோரில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

முகவரி http://itunes.apple.com/us/app/knoword/id436304807?mt=8/

## கணினி மூலை


## 25GB வரை இணையத்தில் சேமிக்கலாம்

இந்த வசதியை Microsoft வழங்குகிறது. 25GB அளவுக்கு ஒன்லைன் சேமிப்பகம் (Online Storage Space), இங்கு நாம் நமது முக்கிய தகவல்களை (Data) சேமித்து வைத்துக் கொள்ள முடியும். இந்த சேவையை மைக்ரோசொப்ட் நமக்கு இலவசமாக வழங்கு கிறது.

இந்த வசதியை நீங்கள் பெறுவதற்கு, உங்களுக்கு MSN அல்லது Hotmail ஏதாவதொன்றில் கணக்கு இருக்க வேண்டும், அவ்வளவுதான்.

# அனைத்து விதமான கோப்புகளையும் திறக்க

Ms Word கோப்புகள் .doc என்ற Format-ல் இருக்கும் மற்றும் பட கோப்புகள் .jpg, .gif, .png என்ற Format-ல் இருக்கும். ஆனால் இப்பொழுது பல விதமான கோப்புகள் பலவிதமான வடிவங்களில் இருக்கிறது.




சில நேரங்களில் அந்த கோப்புகளை எந்த Software-ல் ஓபன் செய்ய முடியும் என்று நமக்கு தெரியாது. எந்த Software சப்போர்ட் செய்யும் என்றும் நமக்கு தெரியாது.

இந்த மாதிரி உள்ள கோப்புகளை நாம் எந்த Software-ல் ஓபன் செய்யலாம் என்று இந்த இணையதளம் நமக்கு சொல்கிறது.

http://www.openwith.org இந்த இணையத்தளதிற்கு சென்று இலவச Software -ஐ Download செய்து கொள்ளவும். பின்பு நமது கணனியில் ஏதேனும் கோப்பினை செய்ய Open செய்ய நேரிடும் பொழுது அந்த கோப்பின் மீது Mouse-ஐ வைத்து Right Click செய்யவும்.

OPenWith.org - How do I Open This? என்பதை Click செய்யவேண்டும்.

இதன் பிறகு அந்த குறிபிட்ட கோப்பினை எந்த Software-y; open செய்யலாம் என்று நமக்கு தெரிவிக்கும். பின்பு தேவயான அந்த Software -ஐ Download செய்யும் Link-ம் கொடுக்கப்பட்டு இருக்கும். அதை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி கொள்ளலாம்.

## Copy செய்ய முடியாத இணையத்தளங்களில்

பெரும்பாலான இணையத் தளங்களில் பதிந்து வைத்துள்ள படங்களை டவுண்லோட் செய்து நாம் பயன்படுத்தக் கூடிய வகையில் தான் வைத்திருப்பார்கள். அதன் மீது கேர்சரைக் கொண்டு சென்று ரைட் கிளிக் செய்ய, விரியும் மெனுவில் 'Save Picture As....' அல்லது Save As என்பதில் கிளிக் செய்யலாம். உடனே வழக்கமாக My Pictures அல்லது Downloads என்ற ட்ரைவ் திறக்கப்பட்டு அங்கு சேவ் செய்திடவா? என்று கேட்கும். வேறு ட்ரைவில் சேவ் செய்திட விரும்பினால் அந்த ட்ரைவைத் திறந்து ஒரு போல்டரில் சேவ் செய்திடலாம்.

. சில இணையத்தளங்களில் மட்டும், கொப்பி செய்ய முயற்சிக்கும்போது, இந்த வசதி தரப்படவில்லை எனும் செய்தி கிடைக்கும். அவ்வாறு படங்களை டவுண்லோட் செய்ய, கொப்பி செய்ய முடியாமல் வைத்திருக்கையில், is facility is not enabled என்ற செய்தி கிடைக்கும்.


அந்தத் தளத்தில் உங்களுக்குத் தேவையான படத்தினைத் திரையில் தெரியுமாறு வைத்துக் கொண்டு பிரிண்ட் ஸ்கிரீன் (Print Screen) பட்டனை அழுத்தவும். கிளிப்போர்ட்-க்கு திரைக் காட்சி செல்லும். MS Paint-இல் புதிய பைல் ஒன்றைத் திறந்து அதில் இதனை பேஸ்ட் செய்து பின் படத்தை மட்டும் கட் செய்து அதனை மீண்டும் புதிய பைல் ஒன்றைத் திறந்து பேஸ்ட் செய்து சேவ் செய்து கொள்ளலாம். இவ்வாறு சேவ் செய்கையில் எந்த போர்மட்டில் சேவ் செய்திட வேண்டும் என்பதனையும் முடிவு செய்து அந்த போர்மட்டைத் தேர்ந்தெடுத்து சேவ் செய்திடலாம்.

# உங்கள் இணையத்தின் வேகம்!!!

Bróad Band இன்டர்நெட் இணைப்பு தரும் நிறுவனங்கள் பல்வேறு கட்டணங்களுடனும், விதம் விதமாய் நிபந்தனைகளுடனும் நமக்கு இணைப்பு தருகின்றன. மற்ற எதனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்றாலும், நம்மிடம் வாங்கும் கட்டணத்திற்கேற்ற வேகத்தில் இணைப்பு கிடைக்கிறதா என்று இன்டர்நெட் இணைப்பின் வேகத்தை நாம் கணக்கிட்டுப் பார்த்து அறிய வேண்டும். இதனை எந்த வழியில் அறியலாம் என்று பார்க்கலாம்.

உங்கள் இன்டர்நெட் இணைப்பின் வேகத்தை அறிய www.speedtest.net என்ற தளத்திற்குச் செல்லுங்கள். அங்கு வேகத்தைச் சோதனை செய்வதற்கான தொடர்பில் கிளிக் செய்தால், உடனே உங்கள் Broad Band இணைப்பிற்கான சுழரவநச-ருக்கும் கம்ப்யூட்டருக்குமான வேகத்தையும், இன்டர்நெட் பதிவிறக்க வேகத்தையும் அது அளந்துகாட்டும். கீழே உங்களுக்கு இன்டர்நெட் இணைப்பு தரும் நிறுவனத்தின் பெயருடன், வரைபடம் ஒன்று காட்டப்பட்டு அதில் இணைய இணைப்பினை நீங்கள் பெறும் நகரம் சுட்டிக் காட்டப்படும்.

தளத்திற்கு சென்றவுடன் Begin Test என்பதை Click செய்யவும்
உங்கள் இணைய வேகம் அடங்கிய தகவல்கள் இப்படி கிடைக்கும்





நீங்கள் இன்டர்நெட் இணைப்பு பெற்று சில ஆண்டுகள் கழிந்திருந்தால், உங்களிடம் முதன் முதலில் கொடுத்த மோடம் தான் இருக்கும். தற்போது அதிக வேக இணைப்பு மோடம் வந்திருக்கக் கூடும்.

கேட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

# யுத்தத்தின் காயங்களுக்கு சிகிச்சை அரசு அதற்கே முன்னுரிமை

## அவுஸ்ரேலிய ஊடகத்துக்கு ஜனாதிபதி செவ்வி



(கொழும்பு)

முப்பது ஆண்டுகளாக யுத்த பாதிப்புக்களின் காயங்களை ஆற்றும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய ஊடகம் ஒன்று வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர், அதிகமான முன்னாள் விடுதலைப் புலிகளின் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு, சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இலங்கை மீது சர்வதேச நாடுகள் போர்க்குற்றங்களை முன்வைத்து வருகிறது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில், தம்மால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் ஊடாக பதில் கிடைக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2013ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு, அனைவரையும் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, பொதுநலவாய நாடுகளின் மாநாடு நேற்று ஆரம்பமானது.

பிரித்தானிய மகாராணி எலிசபெத்தினால் இந்த மாநாடு உத்தியோகபூர்மாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்த மாநாட்டின் போது, உலக நாடுகளின் அபிவிருத்தி குறித்து முக்கிய அவதானம் செலுத்தப்படவுள்ளது.

இதேவேளை, இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவுஸ்ரேலியா சென்றுள்ள ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ, பங்களாதேஸ் பிரதமர் சேக் ஹசீனாவையும் சந்தித்துள்ளார்.

# மின்சார சபையில் விசேட நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சாரசபை ஆரம்பிக்கப்பட்டு 42ஆவது வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி மின்சாரசபையின் மாவட்டக் காரியாலங்கள் தோறும் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அன்றைய தினம் யாழ்.காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சாரசபையின் அலுவலகத்திலும் இது குறித்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வுகளில் பிரதம அதிதியாக இலங்கை மின்சாரசபையின் வடமாகாண பிரதிப்பொது முகாமையாளர் குணதிலக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதேவேளை இலங்கை மின்சார சபையின் மாவட்டக் காரியாலயங்களிலும் இத்தகைய நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (பா)

# "கோல்டன் கீ" நிதிமோசடி அறிக்கை கோருகிறது நீதிமன்றம்

(கொழும்பு)

கோல்டன் கீ கிறடிட் காட் கம்பனியில் பணம் வைப்புச் செய்தவர்களுக்கு அந்தப் பணத்தை மீளச்செலுத்தும் முறையொன்று பற்றி சுருக்கமான இடைக்கால அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு 3 அங்கத்தவர்கள் கொண்ட வட்டவல குழுவுக்கு உயர்நீதிமன்றம் பணித்துள்ளது

இந்த அறிக்கையை எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என பேராசிரியர் ஆர்.வட்டவல தலைமையிலான குழுவுக்கு நீதிமன்றம் பணித்துள்ளது. அத்துடன், ஒக்டோபர் 10க்கு முன் இந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென வட்டவல கமிட்டிக்கு முன்னர் நீதிமன்றம் பணித்தமை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

தனக்கு இதுவரை குழுவின் அறிக்கை கிடைக்காதபடியால் இந்த வழக்குத் தொடர்பில் தன்னால் மேற்கொண்டு எதுவும் செய்ய முடியவில்லை என பிரதி சொலிஸ்டர் ஜெனரல் நீதிமன்றில் தெரிவித்தார்.

பேராசிரியர் வட்டவல, இவ்வறிக்கை சமர்ப்பிக்க மேலும் கால அவகாசம் தேவையென கேட்டுக்கொண்ட போதிலும் நவம்பர் 11ஆம் திகதிக்கு முன் வட்டவல கமிட்டி தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் பணித்தது.

# பாலியல் உத்வேகம் தரும் மாத்திரை வகைகளுக்கு தடை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் முறையான அனுமதிகள் எதுவுமின்றி நாடுமுழுவதும் விற்பனை செய்யப்பட்டுவரும் பாலியல் உத்வேகத்தை ஏற்படுத்தும் மாத்திரைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாலியல் உணர்வைத் தூண்டும் வகையிலான பல மருந்து மாத்திரைகள் தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படுவதர்க சுகாதார அமைச்சு குற்றஞ் சுமத்தியுள்ளது. 50இற்கும் மேற்பட்ட மருந்து மாத்திரைகள் இவ்வாறு சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் அவற்றில் ஆறு மருந்துகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

அனுமதியற்ற மருந்து மாத்திரைகளை பயன்படுத்துவதனால் பக்க விளைவுகள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. வைத்தியர்களின் ஆலோசனைக்கு அமைய பாலியல் உத்வேக மருந்து மாத்திரைகளைப் பயன்படுத்துவதனால் ஆபத்துக்களிலிருந்து மீள முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஒரு வழிப்பாதை நகர சபை ஏற்பாடு

(கொழும்பு)

மன்னார் பஸ் தரிப்பிடம் மற்றும் முக்கிய கடைகளுக்குச் செல்லும் பிரதான பாதையொன்றை மன்னார் நகரசபையும் வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரும் இணைந்து ஒரு வழிப்பாதையாக மாற்றியுள்ளனர்.

மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக வந்து வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள பெரிய கடை வீதியூடாக பஸார் பகுதிக்குச் செல்லும் பாதையே கடந்த வியாழக்கிழமை முதல் ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளது.

இப்பகுதியில் வாகன நெரிசல் அதிகரித்துக் காணப்பட்டமையாலேயே குறித்த வீதியை ஒரு வழிப்பாதையாக மாற்றியதாக வீதிப் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# திங்கட்கிழமை ஹஜ்ஜுப் பெருநாள்

(கொழும்பு)

புனித ஹஜ்ஜுப் பெருநாள் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்படும் என பெரிய பள்ளி வாசலின் பிறைக்குழு அறிவித்துள்ளது. துல் ஹஜ் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. பிறை பார்க்கும் மாநாட்டில் அகில இலங்கை ஜமிய துல் உலமா சபை, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், ஏனைய பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நாட்டின் எப்பாகத்திலும் நேற்று முன்தினம் துல் ஹஜ் மாதத்திற்கான தலைப்பிறை தென்பட்டதாக, தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

# முதியோர் தினவிழா

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் சர்வதேச முதியோர் தினவிழா இன்று காலை 9 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருக மூர்த்தி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.


(உ-18)

# அபராதம் விதிப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலின் குளிர்சாதனப் பெட்டியொன்றில்மனிதபாவனைக்குப் பொருத்தமற்ற உணவுவகைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் அந்தக் ஹோட்டலின் பணிப்பாளர் ஒருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

காலாவதியான இரு வகையான உணவுவகைகளை வைத்திருந்ததாக அவர் மீது இரு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு குற்றத்திற்கும் தலா 2000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.



மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்திருந்த குடியியல் மக்கள் சமூகத்தினருடனான கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள கிறீன்கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்றபோது. நிகழ்வில் கலந்து கொண்ட குடியியல் மக்கள் சமூகப்பிரதிநிதிகளையும் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் இ.ஆனந்தராசா உரையாற்றுவதையும் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ரீ.கனகராஜ் உட்பட பிரதிநிதிகள் மேடையில் அமர்ந்திருப்பதையும், படங்களில் காணலாம். (படம் - பார்த்தீபன்)

# 7ம் அறிவு போதி தர்மர் சொல்லிக் கொடுத்தாரா?

முற்று முழுதாக சீன தயாரிப்பாக சூப்பர் கம்ப்யூட்டர் ஒன்றை முதல் முறையாக தயாரித்திருப்பதாக சீனா அறிவித்துள்ளது. சீனாவில் தயாரிக்கப் பட்ட மைக்ரோபுரோசசர் சிப்ஸ்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ள இந்த சூப்பர் கம்ப்யூட்டர், அமெரிக்கா தயாரித்த சூப்பர் கம்ப்யூட்டர்களைவிட வேகமானது என்கிறார்கள் சீன விஞ்ஞானிகள். இது விநாடிக்கு ஆயிரம் ட்ரில்லியன் கணிப்புகளை செய்யக் கூடியது.

இந்த அறிவிப்பு உலக அளவில் கம்ப் யூட்டர் டெவலப்பர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. காரணம், சீனர்கள் மைக்ரோசிப தயாரிப்பில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். அமெரிக்கா, தென்-கொரியா, ஜப்பான் மற்றும் தாய்வான் நாடுகளின் மைக்ரோசிப் தயாரிப்புகளுடன் ஒப்பிடும்போது சீனத் தயாரிப்புகள், முன்று தலை முறைகள் பின்தங்கியவை.




'இவர்கள் எப்படி திடீரென, 'முற்று முழுதான சீனத் தயாரிப்பு' சூப்பர் கமப் யூட்டருடன் வந்து குதித்தார்கள்?' என்பதே ஆச்சரியத்தின் காரணம்.

பொதுவாகவே சீனர்கள் இப்படி ஒரு அறிவித்தலை விடுத்தால், அதில் ஏதாவது தில்லுமுல்லு இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்படுவது வழக்கம். காரணம் சீனர்கள் மற்றையவர்களின் சமாச்சாரங்களை அப்படியே சுட்டு விடுவதில் சூரப்புலிகள் 'நம்ம தமிழ் வெப்சைட்காரர்கள் போல! எனவே இதிலும் ஏதாவது 'உருவல்' உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சீன சூப்பர் கம்ப்யூட்டர் பற்றிய உள்-ரகசியங்கள் (அப்படி ஏதாவது இருந்தால்) விரைவில் வெளியாகிவிடும். ஒருவேளை நிஜமாகவே முற்று முழுதாக சீனத் தயாரிப்பாக இருந்துவிட்டால்? 7ம் அறிவு போதிதர்மர் சீனர்களுக்கு சொல்லிக் கொடுததிருப்பாரோ! முருகதாஸிடம் விசாரிக்க வேண்டும்.

- விறுவிறுப்பு

பசுவையும் காளையையும் எருமையையும் எருமைக் கடாவையும் மாடு என்றழைக்கும் பருவத்துக்கு வந்து விட்டோம் நாம். இந்த யோக்கியதையில் மாட்டின் சுழிகள் பற்றியும் அவற்றுள் யோகச் சுழிகள் எவை, யோகமற்ற சுழிகள் எவை என்றும் சொன்னால் நமக்கு என்ன விளங்கும்? தாமணிச் சுழி, இரட்டைக் கவம், பாஷகம் சுழி, கோபுரச் சுழி, நீர்ச் சுழி, ஏறு பூரான், லக்ஷ்மிச் சுழி, பட்டிச் சுழி, வீபூதிச் சுழி, ஏறு நாகம் என்பன நல்ல சுழிகள் என்றும் முக்கண் அல்லது அக்னிச் சுழி, குடைமேல் குடை, ஒத்தைக் கவம், விளங்குச் சுழி, பாடைச் சுழி, பெண்டிழந்தான் சுழி, இறங்கு பூரான், நாகபடம், அவற்றுள் முன்னாகம், பின்னாகம், தட்டுச் சுழி, துடப்பச் சுழி, விறிக்கட்டு அல்லது புட்டாணிச் சுழி, ஏழு கட்டுப் பாடைக் கட்டு, வால் முடங்கி, இறங்கு நாகம் என்பன தீய சுழிகள் என்றும் முக்கூடற்பள்ளு அடையாளம் காட்டுகிறது.

# முக்கூடற்பள்ளு



சுழிகள் என்றால் என்ன, அவற்றின் இடம், இருப்பு, பயன்கள் என்ன என்று அறிய ஆவல் உடையவருக்கு நான் ஒரு புத்தகம் அறிமுகம் செய்வேன்.

'The Kangayam Cattle- A Retrospective and Prospective Study" by S. Panneerselvam and N. Kandasamy, Published by Tamilnadu Veterinary and Animal Sciences University, chennai - 600 051.

பள்ளு இலக்கியத்தில் சிறந்தது முக்கூடற்பள்ளு என்கிறார்கள். முக்கூடல் தலத்தில் கோயில் கொண்ட அழகர் மீது பாடப் பெற்றது, ஆனால் வைணவ இலக்கியம் என்று கூறி விட இயலாது.

மூன்று நதிகள் கூடும் இடம் முக்கூடல். கங்கை, யமுனை, சரஸ்வதி சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் என்பது போல் தாமிரபரணி, சிற்றாறு, கயத்தாறு எனும் ஆறுகள் கூடும் இடம் முக்கூடல்.

இந்த நூலின் காலம் கி.பி. 1680 என குறிப்பிடப்படுகின்றது.

பள்ளு இலக்கியம் இசைப்பாடல் தன்மை உடையது. பந்துவராளி, பைரவி, காம்போதி, சங்கராபரணம், ஆனந்த பைரவி, புன்னாகவராளி, கேதார கௌளம், காம்போதி, மத்யமாவதி, மோகனம், நாட்டை, சுருட்டி போன்ற ராகங்களில் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.


மேலும் நிந்தாஸ்துதி வகையிலான இந்த ஏசல் பாடல்கள் வாசிக்க சுகம் தருபவை.

நிந்தாஸ்துதிப் பாடல்கள் கேட்கப் பிரியப்படுகிறவர்கள் என்.சி. வசந்த கோகிலம் இசைக் குறுவட்டுகள் கேட்கலாம்.

உடனடியாக எனக்கு ஞாபகம் வரும் பாடல், 'தந்தை தாய் இருந்தால் உமக்கிந்த குறை எல்லாம் வருமோ ஐயா' எனத் தொடங்குவது.

- நாஞ்சில்நாடன்

# நடக்கப்போவது என்னவென்றால் -



நாளைக்கே ஓர் உள்நாட்டு விசாரணையை நடத்தி, உலக சமூகத்திற்கு ஏற்றதான ஒரு தீர்ப்பை வழங்கி, ராஜபக்ஷ குடும்பம் தனது போக்கை மேற்கிற்கும் இந்தியாவிற்கும் இசைவாக மாற்றிவிட்டதென்றால், இன்றைய போர்க்குற்றச் சலசலப்புக்கள் எல்லாமே அடங்கிப்போய்விடும்.

சீனாவிடம் பட்டிருக்கும் கடன்களை அடைக்க 'மேற்குலகு, இந்தியா, உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம், அனைததுலக நாணய நிதியம் என' இன்னோரன்ன வள்ளல்கள் வரிசையில் நின்று இலங்கைக்கு வாரி வழங்க அவர்கள் எல்லோரும் மீண்டும் ஒன்றாகி விடுவார்கள்.

அவர்கள் எல்லோரும் ஒன்றாகிய பின்பு - மீண்டும் கைவிடப்பட்டு நடுத் தெருவில் நிற்கப்போவது தமிழர்கள் தான். இப்போது மேற்கோடு இணைந்து பழைய போர்கதுற்றப் புதைகுழிகளைக் கிண்டியதற்காக, நாளை அமைதியாகப் பழிவாங்கப்படப் போவதும் தமிழர்கள் தான். அப்படி நடக்கும் போது, மீண்டும், 'அது உள்நாட்டுப் பிரச்சினை' என்று சொல்லிவிட்டு இந்தியா ஓரத்தில் நிற்கும், மேற்கு ஒதுங்கிக் கொள்ளும்.

வடக்கு கிழக்கிற்கு வெளியே - சிங்கள தேசத்தைப் பொறுத்தவரையில் - இலங்கைத் தீவின் 80% குடிமக்களைப் பொறுத்தவரையிலே 'தமிழர்களுக்கு இலகுவாகப் புரிகின்ற விதமாகச் சொல்லவேண்டு மெனில்' மகிநத ராஜபக்ஷ தான் அவர்களது 'தேசியத் தலைவர்'.

முப்பது ஆண்டுகளாக எவராலும் நெருங்கவே முடியாதிருந்த 'அவர் களை ஆட்டிப்படைத்த' எத்தனையோ சிங்களத் தலைவர்களைக் கொன்று போட்ட 'பிரபாகரனையே' கொன்றுவிட்ட தன்னிகரற்ற தலைவர் மகிந்த ராஜபக்ஷ. வேறு எவருமே அங்கே இப்போதைக்குத் 'தலைவர்' ஆகவும் முடியாது, அப்படி ஆகுவதற்கு இலங்கையில் உருப்படியான ஆட்களும் இல்லை, அப்படி எவரும் உருவாகி வருவதற்கான தெளிவான சான்றுகளும் இல்லை.

அதன் அர்த்தம் என்னவெனில் - மேற்குலகும் இந்தியாவும் தமிழர்களுமாகச் சேர்ந்து, ஏதோ ஒரு வழியில் அவரைப் 'போர்க் குற்றவாளி' ஆக்கி, அவரது ஆட்சியைக் கவிழ்த்தாலும் - உலகமே திரண்டு தமது தானைத் தலைவனைப் பழிவாங்கிவிட்டதாகப் பொங்கி எழுந்து, அவருக்கே மீண்டும் வாக்களித்து அவரையே மீண்டும் ஆட்சியில் அமர்த்தும் சிங்கள தேசம். அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியாத அளவுக்கு நிலைமை போனால் கூட 'அவரது ஆசை அண்ணனையோ, அன்புத் தம்பியையோ, செல்வப் புதல்வனையோ ஆட்சியில் அமர்த்தும். அவரது அரசியற் செல்வாக்கிற்கான ஆகக் கடைசிச் சான்று' கடைசியாக நடந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள்.

'அண்ணன் தம்பிக்குள் அடிபாடு வர வேண்டும் உட்பூசல் வெடித்து ஆட்சி கவிழ வேண்டும்' என்ற எமது ஆசைகள் எல்லாம் வெறும் ஆசைகளே. போர்க் குற்ற அழுத்தங்கள் அதிகரிக்க அதிகரிக்க, அவை அவர்களை மேலும் நெருககி ஒற்றுமைப்படுத்துமே அல்லாமல், பிளக்காது. மேற்கினதும் இந்தியாவினதும் கவலையும் அது தான்.

இந்த நிலைமை தெளிவாகத் தெரிநது தான் - 'போர்க் குற்றவ்ாளிகளைக் கண்டறிவதற்கு உள்நாட்டிலேயே ஒரு விசாரணையை நடத்துங்கள்' என்று இலங்கை அரசிற்கு அறிவுரை வழங்கி, அழுத்தமும் கொடுக்கின்றது மேற்குலகு,

'போர்க்குற்றப் பிரச்சினையை ஓரத்தில் வைத்துவிட்டு, இலங்கை அரசாங்கத்துடன் பேசி நல்லதொரு அரசியல் தீர்வைப் பெறுங்கள்' என்று தமிழர்களுக்கும் அறிவுரை சொல்லுகின்றது.

ராஜதந்திரத்தின் அழகு என்பது, எந்த இடத்திலும் தேங்கிவிடாமல், தனது இலக்கு நோக்கி அது வளைந்து நெளிந்து நகர்ந்து செல்லும் நுட்பத்தில் தான் தங்கியுள்ளது.

புதினப்பலகையில்
தி.வழுதி கட்டுரையிலிருந்து...

# கவிஞன்



கவிஞன் என சுட்டப்படாத
கவிஞன்,
யாருடன் பேசுவான்?
சொற்கள் உதிரும்
தோட்டத்தில்
தனிமையில் எதை
ரசிப்பான்?
சொல் உதிர்ந்து
பொருள் கனியும்
கணங்களை அறிவீர்களா?
ஒளியால் சுட்டப்படும்
பொருளனைத்தும்
ஒளியே என அறிவீர்களா?
ஆமெனில்,
நீங்களும் அவனும்
வேறல்ல.

- ச. அனுக்ரஹா

# மூவரின் மரண தண்டனையை நிறைவேற்ற மத்திய அரசாங்கம் சதி செய்கின்றது

## வை.கோ குற்றச்சாட்டு



(சென்னை)

பேரறிவாளன், சாந்தன், முருகன் உட்பட மூவரின் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற மத்திய அரசு சதி செய்வதாக ம.தி.மு.க. பொதுச செயலர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலையில் விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்துச் செய்ய பேரறிவாளன் உட்பட மூவரால் தொடரப்பட்ட வழக்கின் விசாரணையை, சென்னை உயர் நீதிமன்றம் நவம்பர் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. மூவரின் மனுக்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என மத்திய அரசு மற்றும் தமிழக அரசு சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூவரது கருணை மனுவை ஜனாதிபதி ஏற்கெனவே நிராகரித்து விட்டதால், இவர்களின் தூக்குத் தண்டணையை உடனே நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசு தரப்பில் கேட்டுக்கொள்ளப் பட்டது. தமிழக அரசு தாக்கல் செய்த பதில் மனுவில், ஜனாதிபதி கருணை மனுவை நிராகரித்த பின்பு அதில் தலையிடும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

மூவர் சார்பில் ஆஜரான வழக்கறிஞரும், ம.தி.மு.க. பொதுச் செயலருமான வைகோ நீதிமன்ற வளாகத்தில் நிருபர்களிடம் கூறுகையில், கடந்த முறை வழக்கு விசாரணை அமைதியாக நடந்தது. ஆனால், நீதிமன்றத்தில் கொந்தளிப்பும், பதற்றமும் இருந்ததாக கூறி ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார். மூவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரிக்கக் கூடாது என நினைக்கும் மத்திய அரசு பின்னணியில், இந்த மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி, மூவரின் தண்டனையை குறைக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங்கிடம் தெரிவித்ததாக கூறியுள்ளார். ஆனால், 2000ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதி ஆட்சியில் இருந்த தி.மு.க தான் நளினிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை குறைக்க கேட்டும், 3 பேரின் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற கோரியும் ஆளுநருக்கு பரிந்துரை செய்தது. தமிழக அமைச்சரவை மூவரின் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்யக் கோரி தீர்மானம் நிறைவேற்றிட வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 161-ஐ பயன்படுத்தி ஆளுநரின் பரிந்துரை செய்வதன் மூலம் இந்த 3 பேரின் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய முடியும்.

மத்திய அரசு அனுப்பிய சுற்றறிக்கை சட்டபூர்வமானது அல்ல. அதை மீறி முடிவு எடுக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கு உள்ளது. இந்த மூவரின் கருணை மனுவை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

# இந்தியச் செய்திகள்

## மாடுகள் மிதிக்கும் வினோத நேர்த்திக்கடன்

(வதோதரா)

தரையில் படுத்துக்கொண்டு மாடுகளை ஓடவிட்டு மிதிக்கச் செய்யும், வினோத நேர்த்திக் கடனை குஜராத் மாநில பழங்குடியினர் மேற்கொண்டனர்.

குஜராத்தின் தஹோத் மாவட்டம் கர்பதா கிராம மக்கள், தங்கள் புத்தாண்டை வரவேற்கும் விதமாக "காய் கவுரி விரதம்" மேற்கொள்கின்றனர். தங்கள் குல தெய்வமான பர்பா கோடா, சாமுண்டா ஆகிய தெய்வங்களுக்கு நேர்த்திக் கடன் செலுத்தும் பொருட்டு, அலங்கரிக்கப்பட்ட மாடுகளை தங்கள் மீது மிதிக்க செய்யும் சடங்கைச் செய்தனர். இதன் மூலம் மாடுகளுக்கு தாங்கள் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுவதாக இந்தக் கிராம மக்கள் நம்புகின்றனர்.

இந்த விழாவைப் பார்ப்பதற்காக சுற்றியுள்ள கிராம மக்களும் இந்த கிராமத்தில் கூடினர். நேர்த்திக் கடனை செலுத்துபவர்கள் தரையில் படுத்துக்கொளள, மாடுகள் வரிசையாக இவர்களை மிதித்தப்படி ஓடுகின்றன. இந்த நேர்த்திக் கடனைச் செய்தவர்களுக்கு மாடு மிதித்ததில் எந்தக் காயமும் ஏற்படாது என்று நம்புகின்றனர்.

## நடிகர் நரசிம்மன் திடீர் மரணம்

பிரபல குணசித்திர நடிகர் எல்.ஐ.சி. நரசிம்மன் மரணமடைந்துள்ளார். இவர் 200இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். ஆறில் இருந்து அறுபது வரை படத்தில் ரஜினியின் தம்பியாக நடித்தார். அதில் ரஜினி உழைத்து நரசிம்மனை படிக்க வைத்து வேலை பெற்றுக் கொடுப்பதுடன் வசதியான இடத்தில் திருமணம் செய்தும் கொடுப்பார். அதன் பிறகு ரஜினியை நரசிம்மன் உதாசீனம் செய்வார். இதனால் ரஜினி விரக்தியாவது போல் காட்சி இருக்கும்.

கவுண்டமணி, செந்திலுடன் இணைந்து எல்.ஐ.சி. நரசிம்மன் நடித்த நகைச்சுவைக் காட்சிகளும் பிரபலமானவை. வித்வான் கவுண்டமணியிடம் கசாப்பு கடைக்காரரான எல.ஐ.சி. நரசிம்மன் பாட்டு கற்றுகொள்ள வருவார் "நின்னுக்கோரி வரணும்" என்ற பாடலை வேறு மெட்டில் பாட கவுண்டமணி சொல்லிக் கொடுப்பார்.

இதில் நரசிம்மன் ஆடுவெட்டும் கத்தியை வைத்துக்கொண்டு கறியை வெட்டிக் கொண்டே பாடி கவுண்டமணியை பயமுறுத்த அவர் ஓடி விடுவார். இந்த நகைச்சுவை இரசிகர்கள் மத்தியில் பிரபலம் பெற்றது. எல்.ஐ.சி. நரசிம்மன் கடந்த சில மாதங்களாக புற்று நோயால் அவதிப்பட்டார். நேற்றுமுன்தினம் உடல்நிலை மோசமானதையடுத்து வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலன் இன்றி மரணம் அடைந்தார். அவருக்கு இறக்கும்போது வயது 71. எல்.ஐ.சி. நரசிம்மனுக்கு சுரேஷ் என்ற மகனும் ஜெயந்தி என்ற மகளும் உள்ளனர்.

## குற்றம் நிரூபிக்கப்படும் வரை பிணை கோர உரிமை உண்டு

### காங்கிரஸ் பொதுச் செயலாளர்

(புதுடில்லி)


கனிமொழி, கல்மாடி ராஜா ஆகியோரை பிணையில் விடுவிக்க வேண்டும் என்ற குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதும் விசாரணைக் கைதிகள் பிணையில் விடுவிக்கப்பட வேண்டும் என காங்கிரஸ் பொதுச் செயலாளர் திக்விஜய் சிங் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நிறுவனத்தின் உள்நிலவரங்களை முறைகேடாக அறிந்து அதன் மூலம் அந்த நிறுவனப் பங்குகளை வாங்கி இலாபம் அடைவது தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்ட அமெரிக்க வாழ் இந்தியர் ரஜத் குப்தா, 1 கோடி டொலர பிணையத் தொகை கட்டிய பின் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ள ரஜத் குப்தா மீது ஆறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 105 ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கும். அவர் மீதான வழக்கு விசாரணையில் உள்ளதால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இதே மாதிரியான நடைமுறை நம் நாட்டிலும் பின்பற்றப்பட வேண்டும். ஒருவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டால் அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவருக்குப் பிணை பெற உரிமை உண்டு என உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி கிருஷ்ண அய்யர் தெரிவித்துள்ளார். இந்த நடை முறையை பரிசீலிக்க வேண்டும் என்றார்.

## கூடங்குளம் போராட்டம் பாதகவிளைவை ஏற்படுத்தும்

### ரஷ்ய நிபுணர் எச்சரிக்கை



(சென்னை)

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிரான போராட்டம், பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். மின் உற்பத்தித் திட்டங்களை முடக்கி விடும். சீனாவுடன் தற்போது போட்டி போட்டு வரும் இந்திய பொருளாதாரத்தை பின்னுக்குத் தள்ளி விடும் என, ரஷ்ய நிபுணர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

ரஷ்ய நிபுணரான கான்ஸ்டன்டீன் போக்டனோவ், ரஷ்ய அரசின் ஆர்.ஐ.ஏ. நொவாஸ்டி பத்திரிகையில் இது குறித்து எழுதியிருப்பதாவது:

அணுமின் உற்பத்தியை நவீன மயப்படுத்த மறுத்தால், மின் உற்பத்திக் குறைவால் இந்தியப் பொருளாதாரம் பாதிக்கப்படும். நவீன முறையிலான மின் உற்பத்தி இல்லையெனில், உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய தொழிற்துறையை மேம்படுத்தும் இந்தியாவின் இலக்கு, நிறைவேறாது. தற்போது கூடங்குளம் திட்டத்தை எதிர்த்துப் போராடும் குறிப்பிட்ட மக்கள், கல்பாக்கத்தில் 1980 இல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட போது, அமைதியாக இருந்தனர். கல்பாக்கத்தை இயக்கும், மெட்ராஸ் அணுசக்தி நிலையம் இரண்டு கனநீர் அணு உலைகளைக் கொண்டுள்ளது. அவை, தற்போது கூடங்குளத்தில் நிறுவப்பட்டுள்ள ரஷ்யாவின் ஏ.இ.எஸ்.-92 ரக அழுத்த நீர் அணு உலைகளோடு ஒப்பிடும் போது, அவ்வளவு பாதுகாப்பானவை அல்ல.

மேலும், அணு உலை இழப்பீட்டு விவகாரத்தில், இந்தியச் சட்டங்கள் கடினமானவையாக உள்ளன. அவை, இந்திய அணுசக்தித் துறையில் இயங்கி வரும் ரஷ்யா, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகளின் அணு உலை விநியோகஸ்தர்களுக்கு பெரும் எரிச்சலைத் தருகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

## கருணாநிதியை மீறிய சக்தியாக செயற்படுகின்றார் ஸ்ராலின்

(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதியை மீறிய சக்தியாக அக் கட்சியின் பொருளாளர் ஸ்டாலின் செயறபடுகிறார் என அக்கட்சியின் முன்னாள் துணை பொதுச்செயலாளர் பரிதி இளம்வழுதி குற்றஞ்சாட்டியுள்ளார். தி.மு.க. துணைப் பொதுச் செயலாளராக பத்து வருடங்களுக்கும் மேலாக பரிதி இளம் வழுதி இருந்து வந்தார்.

சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின்னர் எழும்பூர் பகுதியைச் சேர்ந்த மூன்று தி.மு.க.வினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கை பரிதி இளம்வழுதி கூறியே எடுக்கப்பட்டது. ஆனால் அந்த மூனறு பேரும் மீண்டும் கட்சியில் சேர்க்கப்பட்டனர். இது பரிதி இளம்வழுதியைக் கலந்து ஆலோசிக்காமல் நடைபெற்றது என்று கூறப்படுகிறது.

இதனையடுத்து ஒக்டோபர் 8ஆம் திகதி உள்கட்சி ஜனநாயகத்தில் எனது சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள துணைப் பொதுச்செயலாளர் பதவியை ராஜிநாமா செய்கிறேன் என்று கருணாநிதிக்குக் கடிதம் எழுதியிருந்தார். அவர் ராஜிநாமா செய்ததையடுத்து அந்தப் பதவிக்கு வி.பி.துரைசாமி என்பவரை நியமித்து நேற்றுமுன்தினம் தி.மு.க. அறிவிப்பு வெளியிட்டது. இந்த நிலையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய பரிதி இளம் வழுதி, கருணாநிதியை மீறிய சக்தியாக ஸ்டாலின் செயறபட்டு வருகிறார் எனக் குற்றம்சாட்டினார்.

## வெளியாகும் புதிய படங்களை இணையத்தில் வெளியிடக்கூடாது

(சென்னை)

இணையத்தளங்களில் புதுப் படங்களை வெளியிடக் கூடாது என நடிகர் விஜய் வற்புறுத்தியுள்ளார்.

நடிகர் விஜய்யின் வேலாயுதம் படம் தீபாவளிக்கு வெளியாகி ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படம் சூப்பர் ஹிட்டாகி உள்ளதாக விஜய் கூறினார். இது குறித்து அவர் அளித்த பேட்டியில், நான் நடித்த 52 படங்களை விட வேலாயுதம் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, சந்தோஷமாக இருக்கிறது. இப்படியொரு அருமையான படம் கொடுத்த இயக்குனர் ராஜாவுக்கு நன்றி. தமிழ் சினிமாவில் முக்கியமான இயக்குனராக அவர் வருவார் என விஜய் கூறினார்.

## உலக சாதனையை நிலைநாட்ட 123 மணி நேரம் பாடும் இளைஞர்

உலக சாதனைக்காகத் தொடர்ந்து 123 மணி நேரம் பாடும் நிகழ்ச்சியை செஞ்சியை சேர்ந்த திருவண்ணாமலை சாலை அரசு பணிமனை புதிய குடியிருப்புப் பகுதியில் வசித்துவரும் பா.ரகுமான் (வயது- 23) என்பவர் பாடிவருகிறார். இந்தச் சாதனையை வியாழக்கிழமை மாலை 7 மணிக்குத் தொடங்கினார். பள்ளி மாணவர்கள் பயிலும் காலங்களில் தங்களது தனித திறமைகளை வளர்த்துக் கொள்ளவும். இது போன்ற தனித்திறன் சாதனைகளுக்கு மாணவர்களை ஊக்குவிக்க ஆசிரியர்களும், பெற்றோர்களும் தூண்டுகோலாக விளங்க வேண்டும் என்பதைச் கூறித் தொடர்ந்து 123 மணி நேரம் பாடல்களைப் பாடி உலக சாதனை செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பா.ரகுமான் கூறினார்.

## உலகச் செய்திகள்


# சீனாவில் தாவர எண்ணெய் விமானம்

(பீஜிங்)

சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுக்கும் வகையில், சீனாவில் முதன் முறையாக தாவர எண்ணெய்யில் இயங்கும் விமான சேவை நேற்று பரிசோதிக்கப்பட்டது.

பூமி வெப்பமாவதைக் குறைக்க வேண்டும் என்ற முயற்சியில் உலக நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இந்நிலையில், உலகின் மிகப்பெரிய நாடான சீனாவும் புதுப்பிக்கத்தக்க மாற்று எரிபொருளை கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக விமானங்களுக்கு தாவர எரிபொருளை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. கடந்த ஆண்டு முதல் அமெரிக்காவும் இணைந்து, ஆல்கா அல்லது ஜட்ரோபா கொட்டையிலிருந்து தாவர எரிபொருள் கண்டுபிடிப்ப தற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. இதன் முதல் கட்டமாக தாவர எரிபொருள் கண்டுபிடிக்கப்பட்டு, அதை போயிங் 747 விமானத்தில் பயன்படுத்தி நேற்று இயக்கப்பட்டது. பெய்ஜிங் பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட அந்த விமானம் இரண்டு மணி நேரம் வெற்றிகரமாக இயங்கியது. "தாவர எரிபொருளில் விமானம் இயங்கியது சீன விமானத் துறையில் ஒரு மைல் கல் ஆகும். அடுத்த 3 அல்லது 4 ஆண்டுகளில் வர்த்தக ரீதியில் விமானங்களில் தாவர எரிபொருள் பயன்பாட்டுக்கு வரும். இதன்மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பை தடுக்க முடியும்" என ஏர் சீனா துணைத் தலைவர் ஹி லி தெரிவித்துள்ளார்.

# அணுகுண்டை விட 100மடங்கு பாதிப்பு; ரஷ்யா சோதித்தது "புலவா" ஏவுகணை



அணு வல்லமை கொண்ட புலவா என்ற நீண்ட தூர ஏவுகணையை வெற்றிகரமாக பரீட்சித்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. 12 மீற்றர் நீளம் கொண்ட இந்த ஏவுகணை ரஷ்யாவின் வட பகுதியிலுள்ள வெண் கடலில் வைத்துப் பரீட்சிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுபோன்ற ஏவுகணை மூன்றாவது முறையாக இந்த ஆண்டில் வெற்றிகரமாக பரீட்சிக்கப்பட்டுள்ளதாக ரஷ்ய தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. 1945 ஆம் ஆண்டு ஜப்பானின் ஹிரோசிமா நகரில் வீசப்பட்ட அணுகுண்டின் பாதிப்பினை போன்று நூறு மடங்கு அதிக தாக்கத்தினை இதன் மூலம் ஏற்படுத்த முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த ஏவுகணையை அடுத்த ஆண்டு சேவையில் இணைந்துக் கொள்ள எதிர்பார்ப்பார்த்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# சவுதியின் அடுத்த இளவரசர்

சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசரை பெயரிடுவதற்கான தயார்படுத்தல்களை சவுதி அரேபிய மன்னர் அப்துல்லா மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.பிரபலமான உள்விவகார அமைச்சர் நயேப் அடுத்த முடிக்குரிய இளவரசராக பெயரிப்படலாம் என அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

புற்றுநோய்காரணமாக முன்னாள் முடிக்குரிய இளவரசர் சுல்தான் கடந்த வாரம் உயிரிழந்திருந்ததை அடுத்து புதிய முடிக்குரிய இளவரசரை பெயரிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1933 ஆம் ஆண்டு பிறந்த நயேப் 1975 ஆம் ஆண்டு முதல் சவுதி அரேபியாவின் உள்விவகார அமைச்சராக பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மிதவாத இஸ்லாமியக் கட்சி வெற்றி

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த டுனிசியாவின் பொதுத் தேர்தலில் டுனிசிய மிதவாத இஸ்லாமிய கட்சி வெற்றிபெற்றுள்ளது. 41 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று, 217 ஆசனங்களைக்கொண்ட பாராளுமன்றத்தில், 90 ஆசனங்களை மிதவாத இஸ்லாமியக் கட்சியான எனாடா கட்சி வெற்றி பெற்றுள்ளது. இன்னும் ஒரு மாதத்துக்குள் டுனிசியாவின் புதிய அரசாங்கம் அமைக்கப்படும் என்று இஸ்லாமிய மிதவாதக் கட்சியினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டதன் பின்னர், டுனிசியாவின் சில பகுதிகளில் வன்முறைகள் இடம்பெற்றிருந்தன. முன்னாள் ஜனாதிபதி பென் அலி, மக்கள் போராட்டங்களால வெளியேற்றப்பட்டதையடுத்து, அங்கு அரசியல் வெற்றிடம் ஏற்பட்டிருந்தது. மத்திய கிழக்கு உள்ளிட்ட லிபியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட மக்கள் புரட்சிக்கு, டுனிசியாவில் நடத்தப்பட்ட மக்கள் போராட்டமே மூல காரண மாக அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# பிரிட்டனின் அடுத்த ராணி?



(லண்டன்)

பிரிட்டன் அரச குடும்பத்தில் அரியணை ஏற்பதில் பெண்ணுக்கும் சம உரிமை அளித்து சட்டத்தில் மாற்றம் செய்யப்படுகிறது. இதையடுத்து, இளவரசர் வில்லியம் ரூ கேத் மிடில்டன் ஜோடிக்கு முதலில் பெண் குழந்தை பிறந்தால், அவர்தான் அடுத்த தலைமை பொறுப்பேற்பார். பிரிட்டன் அரச குடும்பத்தில் தலைமை பொறுப்பு வகிப்பவர்தான் காமன்வெல்த் நாடுகள் அமைப்பில் உள்ள 16 நாடுகளின் தலைவராக இருப்பது வழக்கம். இப்போது ராணி இரண்டாம் எலிசபெத் தலைமை வகிக்கிறார்.

பிரிட்டன் மட்டுமின்றி ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, ஜமைக்கா, ஆன்டிகுவா மற்றும் பார்படாஸ், பெலிஸ், பப்வா நியூ கினியா, கிறிஸ்டோபர் மற்றும் நெவிஸ், வின்சென்ட் மற்றும் கிரானடைன்ஸ், துவாலு, பார்படாஸ், கிரானடா, சாலமன் தீவு, செயின்ட் லூசியா, பகாமாஸ் ஆகியவை அந்த 16 நாடுகளுக்கு அவர்தான் தலைவர். எனினும், காமன்வெல்த் அமைப்பில் 54 நாடுகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. 16 நாடுகளை தவிர ஏனைய நாடுகளுக்கு இந்த சட்டம் பொருந்தாது.

300 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட அரச குடும்ப வாரிசு சட்டத்தின்படி மன்னர் வம்சத்தில் முதலில் பிறக்கும் ஆணுக்கு மட்டுமே அரியணை ஏறும் உரிமை என்று இருந்தது. ஆண் வாரிசு இல்லாத நிலையில் மட்டுமே பெண் அந்த பதவிக்கு வரலாம். இப்போது ராணியாக உள்ள இரண்டாம் எலிசபெத்தின் தந்தை 6ஆம் ஜார்ஜுக்கு ஆண் வாரிசு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பதிவிறக்கப் பெட்டகம்

மனிதர்களை அவர்களுடைய பேராசைகளுடன், அகங்காரங்களுடன், இச்சைகளுடன், குரூரங்களுடன், முடிவேயில்லாத அற்பத்தனங்களுடன் மகத்தான கனிவு ஒன்று இணைத்துக் கட்டியிருக்கிறது போலும். ஒரு மனம் கனிவதையும் விரிவதையும் திறனற்ற சொற்கள் மூலமும் பொருளற்ற குறிகள் மூலமும் பிறிதொரு மனம் தனதென்றே அறிகிறது. காலங்களின் கோடானுகோடி பேதங்களின் தடைகள் தாண்டி இலக்கியத்தை மனிதமனம் கண்டடைகிறது.

இலக்கியவாதி நம் ஆழத்தைத் தீண்டுகிறான். அவனுடன் சேர்ந்து நம் மனம் ஆம் ஆம் என்று தலையசைத்துச் செல்கிறது. அவன் எங்கிருந்து அக்கருத்துக்களை அடைந்தானோ அதே இடத்துக்கு நம் மனமும் சென்று சேரும்போது அவன் நம்மில் ஒரு பகுதியாக ஆகிறான். அக்குரலை எழுப்பும் படைப்பே அக்காலகட்டத்தின் குரலாக மாறுகிறது. காலத்தைத் தாண்டிச் செல்கிறது. – **ஜெயமோகன்**

ஒரு இலக்கியப் படைப்பை அது எழுதப்பட்ட காலத்திலிருந்து 50–60 ஆண்டுகள் கழித்து வாசிக்கும் எந்தவொரு வாசகனுக்கும் வாசிப்பனுபவம் சார்ந்து சில ஏமாற்றங்கள் நிகழக்கூடும். இது இயல்பானது. படைப்புவெளியில் இக் கால இடைவெளி உருவாக்கிய மாற்றங்கள், வாசிப்பனுபவத்தில் குறுக்கிடுவது தவிர்க்க முடியாதது. பின்னர் தோன்றி வளர்ந்த இலக்கியக் கோட்பாடுகள், கலைப்பார்வை சார்ந்து உருவான மாற்றங்கள், பல கட்டங்களில் பல்வேறு விமர்சகர்களால் உருவாக்கப்பட்டிருக்கும் அபிப்பிராயங்கள் என்று ஒரு திறந்த வாசிப்பிற்கான எண்ணற்ற தடைகளைக் காலம் உருவாக்கியிருக்கும். வாசகனின் சமகாலத்தவர்கள், குறிப்பிட்ட அந்தப் படைப்பாளியின் சமகாலத்தவர்கள், பிந்தி வந்த தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் போன்ற பல்வேறு ஆளுமைகளினூடாகப் பின்னோக்கிச் செல்லும் இந்தப் பயணம், சவாலானது. எனினும் நிகழ்காலம் எழுப்பும் கேள்விகளுக்கான விடைகளைக் கண்டறிவதற்கு ஆதாரமான இந்தப் பயணம் மிக அவசியமானது. விழிப்பு நிலையிலுள்ள ஒரு வாசகன் வாசிப்புச் செயல்பாட்டை ரசனை சார்ந்து மேற்கொள்வதில்லை. அவன் ஒரு படைப்பைக காலத்தின் ஆவணமாகக் கருதக் கூடும். படைப்பு உருவான காலத்தின் வரலாறு சார்ந்த தடயங்களோ வாழ்க்கை பற்றிய சித்திரங்களோ அப்படைப்புகளில் தென்படுகின்றனவா என்று தேடக் கூடும். – **தேவிபாரதி**

மரம் தன் கனிகளால் அறியப்படும். மனிதன் தன் செயல்களால் அறியப்படுவான். கலைஞன் தன் படைப்புகளால் மட்டுமே அறியப்படுவான். – **ஜி. குப்புசாமி**

கனவு காண்பது என்பது எழுதுதல்போன்றதுதான். இரண்டும் நம் வசமில்லாமல் நடைபெறும் நிகழ்வுகள். – **போர்ஹே**

ஒருபுறம் புதிய வழிவங்கள், ஏற்கனவே இருக்கின்ற அனைத்தையும் புதுப்பிக்கின்ற தேவை ஆகியன. இலக்கிய முன்மாதிரிகளாக இருப்பனவற்றை உடைத்துவிட்டு அவற்றைக் கடந்து வரவேண்டும். மற்றொருபுறமோ, ஆழமான, பரந்துவிரிகின்ற புரட்சி எடுத்து வைக்கும் அடிகளைப் பின்தொடராமல் எப்படி இருக்க முடியும்? முக்கிய பிரச்சினைகள், வெற்றிகள், மோதல்கள், மானிடப் பிரச்சினைகள், வளர்ச்சி, இயக்கம், சமூக பொருளாதார அரசியல் துறைகளில் தீவிரமான மாற்றத்தை எதிர்கொண்டுள்ள மகத்தான மக்களின் உதயம் ஆகியவற்றிலிருந்து நம்மால் எப்படி விலகியிருக்க முடியும்? மூர்க்கத்தனமான படையெடுப்புகளின் தாக்குதல்களுக்கும் எளிதில் மசிய வைக்க முடியாத காலனியாதிக்கவாதிகள், பல்வேறு சூழல்களையும் பின்னணிகளையும் சேர்ந்த இருண்மைவாதிகள் ஆகியோரின் முற்றுகைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ள இந்த மக்களுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளாமல் யாரால் இருக்க முடியும்? இந்த அடிப்படையான விஷயங்களை அறிந்திருந்தும் இலக்கியமோ அல்லது கலையோ இவற்றால் பாதிக்கப்படாமல் சுதந்திரமாக இருப்பதாக பாவனை செய்ய முடியுமா? – **பாப்லோ நெரூடா**

ஓர் எழுத்தாளனின் அரசியல் அவன் கற்பனையிலிருந்தும், வேறு யாரோவாகத் தன்னை உருவாக்கிக் கொள்ளும் திறனிலிருந்தும் எழுகிறது. இந்த பலமே தனக்காக வாதிட முடியாதவர்களின், யாரும் கேட்க முன்வராத சோகங்களைக் கொண்டிருப்பவர்களின் குரலாக எழுத்தாளனை ஆக்குகிறது.
– **ஓரான் பாமுக்**

எழுத்தாளன் ஒருபோதும் ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவின் குரலாக ஒலிக்க மாட்டான். அவை அவனுக்கு தற்செயலாக அமைந்தவை மட்டுமே. அவன் ஒரு பொது மானுடக் குரலையே முன்வைப்பான். – **ஜெயமோகன**

மனித மனம் எப்போதெல்லாம் பயமும் திகைப்பும் கொள்கிறதோ, எப்போதெல்லாம் சந்தோஷமும் கொண்டாட்டமும் கொள்கிறதோ, எப்போதெல்லாம் துக்கமும் நிர்க்கதியும் கொள்கிறதோ, அப்போதெல்லாம் அவை கதைகளைச் சிருஷ்டிக்கின்றன. இப்படித்தான் கதைகள் உலகிற்கு வந்திருக்க வேண்டும். – **எஸ்.ராமகிருஷ்ணன்**

# வரவிருக்கிறது மாகாண தேர்தல்; கூட்டமைப்பின் நாடகங்கள் தயார்!

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணி சம்பந்தமான பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கியுள்ளன. இந்தப் பிரச்சினையைப் பாவித்து குளிர்காய்வதற்கு வழக்கம் போல சில அரசியல் சக்திகளும் கச்சை கடடிக்கொண்டு களத்தில் இறங்கியுள்ளன. குறிப்பாக 'வெறும் வாயை மென்றவனுக்கு அவல் கிடைத்தது போல', தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பிரச்சினையை வைத்து வானதுக்கும் பூமிக்கும் துள்ளிக் குதிக்கிறது. இந்தப் பிரச்சினையை வைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பும் வேறு சில தமிழ் கட்சிகளும் வவுனியாவில் உண்ணாவிரத நாடகமொன்றையும் அரங்கேற்றியுள்ளன.

அடுத்த வருட முற்பகுதியில் வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என அரச தரப்பிலிருந்து அறிவித்தல் வெளியாகியுள்ளதால், அதை மனதில் வைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பிரச்சினையில் தொடர்நதும் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கும் என்பது நிச்சயம். தமிழ்க் கூட்டமைப்பு நடத்தும் இந்த நாடகம் பார்த்து இரசிப்பதற்கு இரசனையாகத்தான் இருக்கும். ஆனால் அதனால் இறுதியில் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை வரலாற்றை நன்கறிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். ஓர் எடுதுக்காட்டாக திருகோணமலை மாவட்டத்தின் இன்றைய நிலையைக் குறிப்பிடலாம்.

திருகோணமலை தமிழர்களின் பாரம்பரியப் பூமி, அதைச் சிங்களவரகள் ஆக்கிரமிக்கிறார்கள், எனவே வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு என்று தனியரசு அமைக்கப்படும் போது, திருகோணமலைதான் அதன் தலைநகராக இருக்கும் என தமிழரசுக்கட்சி ஜம்பமடித்து வந்தது. அதுவே சிங்களப் பேரினவாதிகளை உசுப்பிவிட, அவர்கள் படிப்படியாக அந்த மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு, சேருவில என்ற புதிய தேர்தல் தொகுதியொன்றையும் உருவாக்கி, அங்கு முன்னர் இருந்த இன விகிதாசாரத்தையும் மாற்றியமைத்துவிட்டார்கள்.

இப்படிச் சொல்வதால் தமிழ் மக்களுக்கு காணி சம்பந்தமான பிரச்சினைகள் எதுவும் இல்லையென்பது அதன் அர்த்தமல்ல. கடந்த 60 ஆண்டுகளாக தமிழ் தலைமைகள் தொடர்ச்சியாகப் பின்பற்றி வரும் மலட்டுத்தனமான, வங்குரோத்துத்தனமான கொள்கைகளைச் சுட்டிக்காட்டவே, அதை இங்கு குறிப்பிட வேண்டி வந்தது.

ஒரு தேசிய இனத்தின் இருப்புக்கும வாழ்வுக்கும் நிலம் என்பது அச்சாணியாகும். இலங்கைத் தமிழர்களுக்கும் அது பொருந்தும். இலங்கையில் தமிழர் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமென்பது, இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைத்த டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே அந்த வகையான குடியேற்ற முயற்சிகளை ஆரம்பித்து வைத்தது. அந்த இனவாத பிற்போக்கு ஐ.தே.கவுடனேயே தமிழ்த் தலைமைகள் அன்றிலிருந்து இன்றுவரை வெளிப்படையாகவும், இரகசியமாகவும் கைகோர்த்து செயல்பட்டு வருகின்றன.

இங்கு நாங்கள் சிங்கள மக்கள் தாங்களாக விரும்பி தமிழ்ப் பகுதிகளில் குடியேறி வாழ்வதையோ, அதே போல தமிழ் மக்கள் சிங்கள மக்களின பகுதிகளில் வாழ்வதையோ திட்டமிட்ட குடியேற்றங்கள் என்று குறிப்பிடவில்லை. அப்படி வாழ்வது இன சௌஜன்யத்துக்கு நல்லதும்கூட. அப்படியில்லாமல் திட்டமிட்ட முறையில், அதுவும் அரச அனுசரணையுடன் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரதேசங்களில் குடியேற்றங்களை மேற்கொண்டு, குறிப்பிட்ட ஓர் இனத்தின தனித்துவத்தை அழிப்பதோ அல்லது அந்தப் பகுதியின் இன விகிதாசாரத்தை மாற்றியமைப்பதோ எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையின் ஆணிவேராக ஆரம்பத்திலிருந்தே நிலப்பிரச்சினை இருந்தும், தமிழ் கட்சிகள் அதைப் புரிந்து கொள்ளாது அல்லது இருட்டடிப்புச் செய்து, சுலபமாக இன வெறியையும் மொழி வெறியையும் மக்கள் மத்தியில் கிளறி, அதன் மூலம் பாராளுமன்ற ஆசனங்களை வென்றெடுப்பதிலும், அதனால் கிடைக்கும் சுகபோகங்களை அனுபவிப்பதிலுமே கண்ணாய் இருந்தனர்.

இன்றும்கூட தமிழர்களின் நிலத்தை அரசாங்கம் அபகரித்து சிங்களவர்களுக்கு வழங்குகின்றது எனக் கூச்சல் போடுகின்றனரேயொழிய, அது எங்கு நடக்கின்றது, என்ன வகையாக நடைபெறுகின்றது, அது சம்பந்தமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து பேசினார்களா என்ற விபரம் எதுவும் கிடையாது. கேட்டால் இந்தியாவின் கவனததிற்குக் கொண்டு வந்துள்ளோம், அமெரிக்காவுக்கு அறிவித்துள்ளோம், நீதிமன்றத்தில் வழக்குப் போடப் போகிறோம் என, வாய்ச்சவடால மட்டும் அடித்துக் கொள்வார்கள்.

1950களில் அரசாங்கம் நாடு முழுவதும் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி நிலமற்ற மக்களுக்குக் காணிகளை வழங்கிய போது, தமிழ் பகுதிகளில் அதைச் சரியாகப் பயன்படுத்தும்படி எந்தவொரு தமிழ்க் கட்சியும் மக்களுக்கு அறிவுறுத்தவில்லை. குடியேற்றத் திட்டங்கள் நிறைந்த கிளிநொச்சியை தனி மாவட்டமாக்கி, அங்குள்ள மக்களுக்கென தனியான நிர்வாகக் காரியாலயங்களை அங்கு அமைக்கும்படி, அப்பொழுது கிளிநொச்சி பட்டின சபைத் தலைவராக இருந்த வீ.ஆனந்தசங்கரியும், கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாயிகள் இயக்கமும் தொடர்ச்சியாக வலியுறுத்திய போது, கிளிநொச்சியைத் தனி மாவட்டமாக்கினால், அங்கு சிங்களக் குடியேற்றம் வந்துவிடும் என தமிழரசுக்கட்சி பூச்சாண்டி காட்டி அதை எதிர்த்தது.

அதுமட்டுமல்லாமல், இன்றும்கூட எந்தவொரு அவசியமான வேலையைத் தமிழ்ப் பகுதிகளில் அரசாங்கமோ அல்லது உள்ளூராட்சி சபைகளோ மேற்கொண்டால் அதை இனவாதம் பேசிக்கொண்டு எதிர்ப்பது பிற்போக்கு தமிழ்த் தலைமைகளின் வழக்கமாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி மற்றும் விடயங்களைத் திட்டமிடுவதற்காக குடிசன மதிப்பு எடுத்தால், அது தமிழர்களின் சனத்தொகையைக் குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை எனக் கூச்சல் போட்டு எதிர்ப்பார்கள். வீதிகளை அகலமாக்குவதற்காக தெருவோரங்களில் உள்ள சில கட்டிடங்களை அகற்ற வேண்டி ஏற்பட்டால், தமிழர்களின் சொத்துகளை அரசாங்கம் அழிக்கிறது எனக் கத்துவார்கள். நல்லூரிலிருந்த சங்கிலியன் சிலை புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்ட போது, தமிழர்களின் வீர மன்னனின் சிலையை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் 'துரோகி' அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடைககிறார் எனப் பொய்ப் பிரச்சாரம் செய்தார்கள்.

அண்மையில்கூட, யாழ் கச்சேரியடியில் உள்ள பழைய பூங்காவின் இற்றுப்போன சுவர்களை அகற்றி விட்டு, புதிதாக வேலி போட முயன்ற போது, தமிழர்களின் பாரம்பரிய சின்னத்தை சிங்கள அரசாங்கம் இடிக்கிறது என்று மூச்சுப்பிடித்துப் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் புலிகளின காலத்தில், பழமைவாய்ந்த யாழ் கோட்டைச் சுவர்களை அவர்கள் இடித்துக் கொண்டு போய், அதை சுட்டு நீறாக்கி சீமெந்துக்குப் பதிலாக விற்றுப் பணமாக்கிய போது, அது விடுதலைப் போராட்டத்துக்கு அவசியம் என்று வாளாவிருந்தார்களோ அல்லது 'மாமியார் உடைத்தால் பொன்குடம், மருமகள் உடைத்தால் மண்குடம்' என்ற கணக்கில் இருந்தார்களோ தெரியவில்லை.

அந்த வகையில் பார்க்கையில் தமிழர்களின் காணிகள் பறிபோகிறது என்ற தமிழ்க் கூட்டமைப்பின் கூச்சலும் உண்மையா அல்லது தேர்தல் ஸ்ரண்டா என்பதைத் தெளிவாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனெனில் இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்படவிருக்கும் காணிப்பதிவுத் திட்டத்தை தமிழர்களுக்கு மட்டும் எதிரான, அதுவும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு எதிரான ஒரு விடயமாக தமிழ்க் கட்சிகள் ஒரு புரளியைக் கிளப்பி, புலம் பெயர் தமிழர்களின் வயிற்றில் புளியைக் கரைத்து வருவது எல்லோரும் அறிந்த விடயம்.

எனவே அரசாங்கம், தமிழ்த் தேசியக கூட்டமைப்பு மேற்கொண்டுள்ள பிரச்சாரங்கள் குறித்து கவனம் செலுத்தி, உண்மை நிலைமைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துவது அவசியம். மறுபக்கத்தில், காணிக் கொள்கை சம்பந்தமாக அரசாங்கம் தனது கொள்கையைப் பகிரங்கமாக முன்வைப்பதும் அவசியம். குறிப்பாக மாகாணசபைகளுக்கு உள்ள காணி அதிகாரத்தை உயிருள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் உடனும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதைவிடுத்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க போன்ற இனவாதிகள் கண்டதையும் உளற விட்டுவிட்டு, அரசாங்கம் தள்ளி நின்று வேடிக்கை பார்ப்பது, அரசாங்கத்தின் மீது தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் அவநம்பிக்கையை வளர்க்கவே உதவும். அரசாங்கம் இந்த மாதிரியான விடயங்களில் தெளிவாகவும், உறுதியாகவும் செயற்படத் தவறினால், கெட்ட சந்தர்ப்பங்களை எதிர்பார்த்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற பிற்போக்கு சக்திகள், அதைப் பயன்படுத்தி மீண்டும் இலங்கையில் இனவாத வன்முறை அரசியலைத் தூண்டிவிடும் வாய்ப்பு ஏற்படும் என்பதை அரசாங்கம் பாரதூரமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கத்தின கைகளில்தான் எல்லாமே தங்கியிருக்கிறது.

நன்றி: வானவில் இதழ் 10



# கடாபி நல்லவரா, கெட்டவரா?

லிபியாவை ஜனநாயகமற்றதொரு நாடாகவே கடாபி ஆட்சி செய்தார். அங்கு கட்சிகள் இல்லை, தேர்தல்கள் இல்லை, நாடாளுமன்றம் என்று எதுவுமேயில்லை! ஆனாலும், லிபியரகளை கடாபி தனது ஆட்சிக் காலத்தில் செல்வந்தர்களாக மாற்றினார். அந்த மக்களுக்கு - அதிக பொருளாதார சலுகைகளை வழங்கினார். நம்பினால் நம்புங்கள், லிபிய மக்கள் 'கரண்ட் பில்' கட்டுவதேயில்லை. லிபியர்களுக்கு மின்சாரத்தைக் கூட கடாபி இலவசமாகவே வழங்கினார்.

பிறகேன் கடாபிக்கு எதிரான புரட்சி வெடித்தது என்கிறீர்களா? எல்லாமே கடாபிதான் - கடாபிதான் எல்லாமே என்கிற 40 ஆண்டுகளுக்கும் மேலான சர்வதிகாரம் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பும், ஆத்திரமுமே புரட்சியாக வெடித்தது! இந்தப் புரட்சிக்கு எண்ணெய ஊற்றி உசுப்பேத்தி விட்டன அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும்!

கடாபி ஒன்றும் ராஜ வம்சத்து ஆளில்லை! ஆடுகளையும், ஒட்டகைகளையும் மேய்த்துத் திரிந்த நாடோடிப் பெற்றோருக்குப் பிறந்தவர்தான் இந்த மனிதர். ஆனால், தனது 27ஆவது வயதில் லிபியாவின் ஆட்சியைக் கைப்பற்றி 'சுமார் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக ஒரு சக்கரவர்த்தியைப போல் ஆண்டு அனுபவித்தார்!

இயற்கையில் கடாபி ஒரு ரசனையாளர். தன்னை அழகுபடுத்திக் கொள்வதில் அலாதிப் பிரியங் கொண்டவர். ஒரு நாளில் ஏராளமான தடவைகள் ஆடைகளை மாற்றிக் கொள்வார். தன்னைச் சந்திக்க விருந்தினர்கள் வந்து காத்துக் கொண்டிருக்கும் போதும், தனது அறைக்குச் சென்று மீண்டும் ஆடைகளை மாற்றிக் கொண்ட பிறகுதான் சந்திக்க வருவார். அதிலும், வெள்ளை நிறம் சார்ந்த ஆடைகளில் கடாபிக்கு நிறையப் பிரியம்.

கடாபி கவர்ச்சியான உக்ரேன் பெண்களையே அவரின் தாதியர்களாகத் தெரிவு செய்து வைத்திருந்தார். அவர்களுடைய தோற்றம் அதற்கு முக்கியமானதொரு காரணமாக இருந்திருக்கலாம். தன்னைச் சுற்றி அழகிய பொருட்களும், அழகிய மனிதர்களும் இருப்பதை அவர் பெரிதும் விரும்பினார்.

கடாபியிடம் விசித்திரமான பழக்க வழக்கங்கள் இருந்தன. அரபுப் பாடலகளை பழைய 'கசற் பிளேயர்'களில் கேட்பதில் அவருக்கு அலாதிப் பிரியம்.

ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளும் வேளைகளில் ஏழைச் சிறுவர்களைக் கண்டால் கடாபி தனது வாகனத்திலிருந்தபடியே காசையும், இனிப்புப் பண்டங்களையும் வெளியில் வீசி எறிவார். அவரின் வாகனத்தைத் துரத்தியபடியே சிறுவர்கள் அவற்றினைப் பொறுக்கிக் கொள்வார்கள். ஆனால், ஒருபோதும் அந்தச் சிறார்களின் அருகில் கடாபி சென்றதேயில்லை. காரணம், அவர்களிடமிருந்து தனக்கு நோய்கள் ஏதாவது தொற்றிவிடுமோ என்கிற பயம்தான்.

இவை மட்டுமல்ல, கடாபி வெளிநாடுகளுக்குச் சென்றால், அங்கு தனது பெண் மெய்ப்பாதுகாவலர்களால் சூழப்பட்ட கூடாரத்தினுள்தான் தூங்குவாராம் என்றும் கூறப்படுகிறது.

இப்படி லிபியத் தலைவரிடம் நிறையவே விந்தையான பழக்க வழங்கங்கள் இருந்தன!

கடாபியின் சரி - பிழைகளுக்கப்பால், வரலாற்றின் அதிக பக்கங்களில அவர் - இனி ஒரு கொடுங்கோலனாகவே நமது குழந்தைகளால் வாசிக்கப்படுவார். ஏனெனில், துரதிர்ஷ்டவசமாக கடந்த சில தசாப்தங்களாய் வரலாறுகளை - அமெரிக்காவும், அதன் கூட்டாளி நாடுகளுமே தமக்கு ஏற்றாற் போல் புனைந்து வருகின்றன.

கடாபி ஒரு் வரலாற்று நாயகன் என்பதில் இரண்டு கதைகள் இல்லை. ஆனால், அந்த நாயகன், நம்மில் அநேகமானோர் நினைத்துக் கொண்டிருப்பது போல் - அத்தனை நல்லவருமில்லை, அத்தனை கெட்டவருமில்லை.

- தமிழ்மிரரில் மப்றூக் கட்டுரையிலிருந்து...

# கைதுசெய்யப்பட்ட மகனை மீட்டுத்தரும்படி கதறியழுத தாய்

(யாழ்ப்பாணம்)

2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி குருநகர் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணை எதுவுமின்றி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தனது மகனை மீட்டுத்தரும்படி யாழ். குருநகரைச் சேர்ந்த நிர்மலநாதன் நேருரஞ்சினி என்ற பெண் மனுவொன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் ரி.இ.ஆனந்தராசாவிடம் கையளித்துள்ளார்.

நேற்று யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளருடனான சிவில் சமூக பிரதிநிதிகள் சந்திப்பிலேயே மேற்படி தாய் ஆணையாளரிடம் தனது மகனை மீட்டுத்தரும்படி கோரி குறித்த மனுவைக் கையளித்துள்ளார்.

ஆணையாளரின் முன்பாக கண்ணீர் விட்டு அழுதவாறு சம்பவத்தை விபரித்த அந்தத் தாய் தனது மகன் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் புகைப்படமொன்று யாழ். தினசரிப் பத்திரிகையில் கடந்த 2011 ஜுலை மாதம் 11 ஆம் திகதி வெளிவந்திருந்தமையையும் சுட்டிக்காட்டியதுடன் அதன் பிரதியையும் தன்னால் வழங்க முடியுமென தெரிவித்தார்.

அதேவேளை, பாதுகாப்புத் தரப்பினர், ஜனாதிபதி, ஜனாதிபதியின் பாரியார் ஆகியோருக்கும் தாம் கடிதங்களை எழுதியிருந்ததாகவும் தற்போதுதான் ஜனாதிபதியின் செயலாளரின் கடிதமொன்று கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இருந்தும் தனது மகன் இதுவரை தனக்குக் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்த அவர், மனித உரிமை ஆணையாளராகிய நீங்கள் எனது மகனை மீட்டுத்தர வேண்டும். ஒரு மாதத்தில் எனது மகன் எனக்குக் கிடைக்கவில்லையென்றால் நான் தற்கொலை செய்துகொள்வேன் எனவும் கண்ணீர் விட்டு கதறியழுதார்.

இம்மனுவைப் பெற்றுக்கொண்ட ஆணையாளர் தமது அதிகாரத்திற்குட்பட்ட நடவடிக்கையை தாம் மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

மேலும் சில பெண்கள் தமது காணாமற்போன உறவினர்கள் குறித்து அவர்களைக் கண்டுபிடித்துத் தரும்படி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை 1996 ஆம் ஆண்டு முதல் காணாமற்போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனவும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். காரியாலயம் பூரணமாக செயற்படக்கூடிய வகையில் மாற்றியமைக்கப்படவேண்டும் எனவும் பத்திரிகைகளில் வருகின்ற மனித உரிமைகள் தொடர்பான செய்திகளை ஆராய்ந்து அதன் சரி, பிழை குறித்து உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும்



சிவில் சமூகப் பிரதிநிதிகளினால் பலவேறு கோரிக்கைகள் ஆணையாளரிடம் முன்வைக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# மீளக்குடியமர்ந்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(முள்ளியான்)

மீளக்குடியமர்ந்த வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் முள்ளியான் கிராம அலுவலர் பிரிவில் 2 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த 39 அங்கத்தவர்களுக்கு கோழிகள் வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலக ஏற்பாட்டில் முள்ளியான் கிராம அலுவலர் பிரிவில் கட்டைக்காடு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், நித்தியவெட்டை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களைச் சேர்ந்த 39 அங்கத்தவர்களுக்கு தலா ஒருவருக்கு 30 கோழிகள், கூடு அடைப்பதற்குரிய கம்பிவலை, கோழித்தீவனம், தண்ணீர்க் கான் என்பனவற்றை யு.என்.நிறுவனம் வழங்கியுள்ளது.

மீளக்குடியமர்ந்தபின் இதுவரை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் இருந்து எவ்வித உதவிகளும் பெறாத தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கே இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு முள்ளியான் கிராம அலுவலர் அலுவலகத்தில் கிராம அலுவலர் எஸ்.தோமஸ்யூட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யு.என்.நிறுவனப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (70)

# இலங்கையுடனான 2 ஆவது டெஸ்ட் பாகிஸ்தான் 9 விக்கெட்டால் வெற்றி

(துபாய்)

இலங்கை அணியுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியுள்ளது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 239 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 403 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

போட்டியின் 3 ஆவது நாளான நேற்று முன்தினம் தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 81 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணி நான்காவது நாளான நேற்று 257 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனால் இப்போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெறுவதற்கு இரண்டாவது இன்னிங்ஸில் 94 ஓட்டங்கள் மாத்திரமே தேவைப்பட்டது.

இன்று ஐந்தாவது நாள் ஆட்டம் எஞ்சியிருந்த நிலையில், பாகிஸ்தான் அணியின் வெற்றி தவிர்க்கப்பட முடியாது என்பது வெளிப்படையாகியது. எனினும் நேற்று குறைந்தபட்சம் 23 ஓவர்கள் எஞ்சியிருந்த நிலையில் நேற்றைய தினமே வெற்றி இலக்கை அடையத் தீர்மானித்த பாகிஸ்தான் அணி வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முற்பட்டது.

தௌபீக் உமர் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்த போதிலும் மொஹமட் ஹபீஸ்ும் அஸ ஹார் அலியும் மேலதிக விக்கெட் இழப்பை தடுத்து பாகிஸ்தான் அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர். 24.1 ஓவர்களில் ஒரு விக் கெட்டை மாத்திரம் இழந்து இந்த இலக்கை அடைந்தது பாகிஸ் தான் அணி.

இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் தரங்க பரணவிதான 72 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 52 ஓட்டங்களையும் பெற்றனர். தம்மிக பிரசாத் 33, குமார் சங்கக்கார 30, ஓட்டங்களையும் பெற்றனர். ரங்கன ஹேரத் 15 ஓட்டங்களைப் பெற்றார். வேறு எவரும் இரண்டு இலக்க ஓட்ட எண்ணிக்கையைப் பெறவில்லை.

லஹிரு திரிமான்ன (8), மஹேல ஜயவர்தன (5) திலகரட்ன தில்ஷான் (3) கௌஷல் சில்வா (8) சானக வெலகெதர (4), சுரங்க லக்மால் (8), ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களில் சயீட் அஜ்மல் 68 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஜுனைத் கான் 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் அப்துர் ரஹ்மான் 65 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் மொஹமட் ஹாபிஸ் 30 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.




பாகிஸ்தான் அணியின் இரண்டாவது இன்னிங்ஸில் மொஹமட் ஹாபிஸ் ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களையும் அஸார் அலி ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கைப் பந்துவீச்சாளர்களில் ரங்கன ஹேரத் 29 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

சயீட் அஜ்மல் இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார். 3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் தற்போது பாகிஸ்தான் அணி 1-0 என்ற விகிதத்தில் முன்னிலையில் உள்ளது.

# இங்கிலாந்து வெற்றி



(கொல்கத்தா)

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று நடைபெற்ற ருவென்ரி - 20 போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இந்திய அணி 20 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் ரெய்னா 29, டோனி 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பின் 3, பிரஸ்னன், போபாரா இருவரும் தலா 2, பட்டேல் ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய இங்கிலாந்து அணி 18.4 ஓவரில் 4 விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அவ்வணி சார்பாக பீற்றர்சன் 53, பட்டேல் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பதான், ஜடேஜா, கோலி, ரெய்னா நால்வரும் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக பீற்றர்சன் தெரிவானார்.

## சொத்து விபரங்கள்…

தேர்தலில் போட்டியிடத் தகுதியிழந்தவர்களாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தேர்தல் நிறைவடைந்து மூன்று மாதங்களுக்குள் வேட்பாளர்கள் தங்களது சொத்து விபரங்களை வெளியிட வேண்டியது அவசியமானது எனவும் குறித்த கால எல்லைக்குள் சொத்து விபரங்கள் அறிவிக்கப்படாவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, சொத்து விபரங்கள் பற்றிய சட்டங்களை கடுமையாக்கும் முயற்சிகளுக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என பவ்ரல் அறிவித்துள்ளது.

## ஜே.வி.பி. தலைவர்…

வெளிவந்துள்ளன. இதேவேளை, அமெரிக்காவிலும் கனடாவிலும் இயங்கும் கிளைகள், குமார் அணியின் தேசிய ரீதியான செயற்பாடுகள் தொடர்பில் அவதானித்து வருவதாகவும் அதன் பின்னரே தாம் எந்த அணியினரை ஆதரிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்கவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரித்தானியா, இத்தாலி, பிரான்ஸ், சைபிரஸ், சுவீடன், தென் கொரியா, அவுஸ்ரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இயங்கும் ஜே.வி.பியின் கிளைகளே தற்போது குமார் குணரத்தினம் அணியின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன.

சவூதி அரேபியா, ஐக்கிய அரபு ராஜ்ஜியம், கட்டார், ஓமான் ஆகிய நான்கு நாடுகளில் செயற்படும் சர்வதேசக் கிளைகளே தற்போ்து சோமவன்ச அணியின் கட்டுப்பாட்டில் உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அச்சுறுத்தலை…

சூழலை நாம் விரும்பவில்லை. இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் கீழ் இயங்கும் புலனாய்வு அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு றெஜிமென்ட் தளபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

நாடு தழுவிய ரீதியாக பாதுகாப்புப் படைத் தலைமையகங்களில் இந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு பற்றாலியன்களை நிறுத்தியுள்ளோம்.

புதிதாக உருவாக்கப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவு பற்றாலியன்களின் ஆட்பலம் பற்றிய தகவல்களை வெளியிட முடியாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## இலங்கைக்கு…

இதேவேளை, இலங்கைக்கு எதிரான சதியைத் தோற்கடிப்பதற்குப் பிராந்திய நாடுகள் ஒன்றிணைய வேண்டும். என இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஆப்கான் போருக்கு…

ஈடுபடுத்துவது அரசியல் ரீதியில் மிக உணர்ச்சிபூர்வமாக அமையும் எனக் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கை படைத்தரப்பினரை ஆப்கானிஸ்தான் படைநடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது இலங்கையின் முஸ்லிம் சிறுபான்மையினரிடையே ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் அல்கைதா போன்ற அமைப்புகளின் ஆத்திரத்தை ஈர்க்க நேரிடும் ஆபத்து குறித்தும் இலங்கை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் கோத்தாபய ராஜபக்ஷ றொபேர்ட் ஓ பிளேக்கிகுக்கு கூறியதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

## போர்க்குற்றம் குறித்த…

பொதுநலவாய- அமைப்பின் பதினொரு உறுப்பு நாடுகளின் நிபுணர்கள் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை இந்தப் பெறுமானத்தை, குறிப்பாக மனித உரிமைகள், சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் அமையும் என நம்புகிறேன். இது மிகவும் முக்கியமானது.

2013 ஆம் ஆண்டில் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாடு இலங்கையில் நடைபெற உள்ளதால், இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் உன்னிப்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது படைத்தரப்பினரால் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இப்போரின் போது என்ன நடந்தது, எத்தகைய போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன, மனிதகுலத்திற்கு எதிரான இத்தகைய குற்றங்களுக்கு எவர் பொறுப்பு என்பன தொடர்பில் கண்டறிய பொருத்தமானதும் சுதந்திரமானதுமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் தனதுரையில் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# வடக்கில் மனித உரிமைகளை மேம்படுத்த அனைவரது ஒத்துழைப்பு அவசியமாகும்

## ஆணையாளர் ஆனந்தராசா வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் மனித உரிமைகளை மேம்படுத்த சிவில் சமூகத்தினர், பொலிஸார், அரச உத்தியோகத்தர்கள் என அனைவரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட வேண்டுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் ரி.இ.ஆனந்தராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.காரியாலயத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் காரியாலய அதிகாரி ரி. கனகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில் 1970 ஆம் ஆண்டு காலத்திற்கு முன்னர் வடக்கில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் இருந்த மனித உரிமை மேம்பட்ட நிலையை அடைவதற்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழு பாடுபட்டு வருகின்றது.

இதற்காக நான் பதவியேற்றதும், யாழ். குடாநாட்டிற்கு முதலில் விஜயம் செய்ய விரும்பினேன். அதன்படி எனது குடாநாட்டிற்கான விஜயத்தின் போது நேற்று முன்தினம் பொலிஸ் அதிகாரிகளுடன் மனித உரிமைகள் தொடர்பாக கலந்துரையாடலில் ஈடுபட்டேன். இதன்போது பல வழிகளிலும் ஒத்துழைப்புத்தர பொலிஸார் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

அதேபோன்று அரச அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளேன். சமூகத்தில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் முக்கியமானவர்கள் நீங்கள் சமூகத்தின் கண்கள் போன்றவர்கள். உங்களது ஒத்துழைப்பு மனித உரிமைகளை மேம்படுத்த முக்கியமானது. எனவே மனித உரிமைகள் காரியாலயத்துடன் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

எமது ஆணைக்குழுவிடம் நிதிபலம் இல்லை. அத்துடன், அதிகாரங்களும் குறைவு யு.என்.எச்.சி.ஆர், யுனிசெப், யு.என்.டி.பி ஆகிய நிறுவனங்கள் எமக்குரிய நிதியுதவிகளை வழங்கி வருகின்றன.

இருந்தும பாமர மக்களின் பிரச்சினைகளை அறிந்துகொண்டு அவற்றிற்குத் தீர்வு காணவும் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கவும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு பாடுபடும் எனவும் தெரிவித்தார். இந்தநிகழ்வில், இலங்கை மனித உரிமை யாழ்.காரியாலய விசாரணை அதிகாரி இசதீன் வசந்தராசா மற்றும் பெருமளவு சிவில் சமூகப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (பா)

# ஐம்பது வாகனங்களை சேதப்படுத்திய யானை

(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்டத்தின் ஹெக்கிராவை பிரதேசத்தில் நகருக்குள் நேற்றுக் காலை புகுந்த காட்டு யானை 50 வாகனங்களைத் தாக்கிச் சேதப்படுத்தியது. காலை முதல் அட்டகாசம் புரிந்த யானையை இரவு பொலிஸாரும், வன இலாகா அதிகாரிகளும் இணைந்து காட்டுக்குள் துரத்தியடித்தனர். இந்த யானையிடம் இருந்து தப்புவதற்காக மக்கள் பதறியோடிய போது பெரும் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்பட்டது.

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு சுதந்திர தினத்தில் முன்னுரிமை

(கொழும்பு)

2012ஆம் ஆண்டு அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள இலங்கையின் 64ஆவது சுதந்திரதின நிகழ்வுகளில் வடக்கு கிழக்கு மக்களையும் இணைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது நடைபெற்று வருவதாக பிரதமர் தி. மு. ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் 64ஆவது சுதந்திர தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் பிரதமரின் தலைமையின் கீழ் நடைபெறுகின்றன.

இதற்கான முதற்கட்ட பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் அதாவது 1980ஆம் ஆண்டில் சுதந்திர தின நிகழ்வுகள் அநுராதபுரத்தில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நித்திரையிலிருந்த பெண் பாம்பு தீண்டி மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தேற்றாத்தீவு பிரதேசத்தில் உறக்கத்தில் இருந்த பெண் ஒருவரை பாம்பு தீண்டியதனால் அப்பெண் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது என களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள தேற்றாத்தீவு வைத்தியர் வீதியில் உள்ள வீடு ஒன்றில் சமயலறையில் சம்பவதினம் இரவு கதவின் இடை வெளியால் உள்நுழைந்த பாம்பு உறங்கிக் கொண்டிருந்த பெண்ணை தீண்டியதால் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்தியாவில் கைதான மீனவரை விடுவிக்க நடவடிக்கை வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. இந்தியாவில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிப்பதற்கு, போதுமான நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என அந்த கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கைதுசெய்யப்படும் இந்திய மீனவர்களை விடுவிக்க இந்திய அரசாங்கம் முனைப்புகளை மேற்கொண்டாலும் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க இலங்கை போதிய அக்கறை காட்டுவதில்லை எனவும் ஹெல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் வரை 144 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டனர், இவர்களில் 76 பேர் மாத்திரமே இதுவரை விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசாங்கம் ராஜதந்திர ரீதியிலான முனைப்புகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஜாதிக ஹெல உறுமய சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இந்தியாவின் அந்தமான் தீவுகளில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்ககோரி, புத்தளம் மாவட்டம் கல்பிட்டி பிரதேசத்தில் உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும், பௌத்த பிக்குகளில் ஒருவர் சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# ஏழு வீதமான சிறுமிகள் இலங்கையில் கர்ப்பம் தரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 10 தொடக்கம் 14 சத வீதமான சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என குடும்ப சுகாதாரப் பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது. இவர்களில் 7 சத வீதமானோர் கர்ப்பம் தரிக்கின்றனர் எனவும் அது தெரிவித்துள்ளது.

இதேவேளை, பெண்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கென நாடளாவிய ரீதியில் ஆலோசனை நிலையங்களை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக மகளிர் விவகார, சிறுவர் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வினையயும் ஆலோசனைகளையும் வழங்கும் பொருட்டே இந்த ஆலோசனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது

# கருக்கலைப்பு நிலையம் பொலிஸாரால் சுற்றிவளைப்பு

ஆயுர்வேத சிகிச்சை நிலையம் என்ற போர்வையில் மிகவும் சூட்சுமமான முறையில் ஜா-எல பகுதியில் இயங்கிய கருக்கலைப்பு நிலையமொன்றை சுற்றிவளைத்த பொலிஸார், நடத்துனர் உட்பட நால்வரை கைது செய்துள்ளனர். கைதான நால்வரும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்ததுடன் நீதிமன்றின் உத்தரவின் பேரில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கருக்கலைப்பு நிலையத்தை நடாத்தி வந்த 60 வயது பெண்ணும் அந்த நிலையத்துக்கு கருக்கல்லைப்புக்கு வந்திருந்த பெண்கள் உட்பட அங்கிருந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் .

குறித்த நிலையம் ஜா-எல வெலிகம்பிட்டிய கிறிஸ்துராஜ மாவத்தையிலுள்ள வீடொன்றில் மேல்மாடியில் இயங்கி வந்துள்ளது. கருக்கலைப்புக்காக வரும் நபரொருவரிடம் 18 ஆயிரம் ரூபா அறவிட்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கும் ஜா-எல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# அடிப்படை உரிமை மீறப்படுவதாக தபால் மா அதிபர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழுவினால் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் எம்.கே.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி நிஹால் சில்வா தலைமையிலான இக்குழு தபால் சேவையில் ஊழல் இடம்பெற்றதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இக்குழுவின் சட்டபூர்வ தன்மை குறித்து தனக்கு பிரச்சினை உள்ளதாகவும் மேற்படி அறிக்கையின் உள்ளடக்கம் குறித்து தனக்கு இதுவரை அறிவிக்கப்படவுமில்லை எனவும் தபால் மா அதிபர் திஸாநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தபால் திணைக்களத்துக்கு எதிராக முன்வைக்கப்பட் 16 குற்றச்சாட்டுகளுக்கு தபால் மா அதிபர் பொறுப்பு என மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 5 குற்றச்சாட்டுகளுக்கு அவர் மறைமுகமாக பொறுப்பு எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கை விரைவில் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# முன்னாள் அமைச்சர் காலமானார்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மனோ விஜேரட்ன நேற்றுக் காலமானதாக அவரின் குடும்ப வட்டாரங்கள் தெரிவித்தன. 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டு தெரிவான மனோ விஜேரட்ன பின்னர் அரசாங்கத்தரப்புக்கு மாறி தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா பிரதேச செயலகத்தின் அபிவிருத்திக் குழுக்கூட்டம்

(வவுனியா)

வவுனியா பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி குழு கூட்டம் நேற்றுக் காலை 9 மணிக்கு வவுனியா பிரதேச செயலகத்தின கேட்போர் கூடத்தில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியூதீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் நடைபெற்று வரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலும் திணைக்களத் தலைவர்களிடம் அமைச்சர் கேட்டுக்கொண்டதுடன் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் இடர்பாடுகள் மற்றும் தாமதம் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

இக்கூட்டத்திற்கு வன்னிப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன் மற்றும் வினோநோகதாரலிங்கம், வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் தலைவர் க.சிவலிங்கம் உட்பட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டம் அமைச்சர் வவுனியாவில் முகாமிட்டு இருப்பதை காரணம் காட்டி அவசரமாக ஒழுங்கு செய்யப்பட்டதாக பிரதேச செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# புதிய கல்வியாண்டின் விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ வணிகபீடம், விஞ்ஞானபீடம் என்பவற்றுக்கு தெரிவான புதுமுக மாணவர்களுக்கு எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கும், கலை, சட்டம் என்பவற்றுக்கு தெரிவான மாணவர்களுக்கு எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கிலும், 9 ஆம் திகதி புதன்கிழமை இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் பாடங்களுக்குத் தெரிவான புதுமுக மாணவர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண் கலைக்கழகத்திலும் கல்விச் செயற்பாடு ஆரம்பமாகவுள்ளது. (எப்.எஸ்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.